வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු






Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 07.05.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 128 பக்கங்கள் : 12


### வீஸா வழங்கல் விவகாரம்

# அமைச்சர் ஹரீன் பதவி விலகல்?



கொழும்பு, மே 07

சுற்றுலா துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார் என்று அவருக்கு மிக நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. 11



## சோதியாவின் தாயார் காலமானார்!


வடமராட்சி, மே 07

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் தளபதி மேஜர் சோதியாவின் தாயாரான மைக்கல் ராசாமேரி காலமானார்.

வடமராட்சி - கரவெட்டியில் தனது இல்லத்தில் 11

## நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை பொது முகாமையாளராக தமிழர்!

### எந்திரி பாரதிதாசன் பொறுப்பேற்றார்



கொழும்பு, மே 07

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக யாழ்ப்பாண தமிழர் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

வடக்கு, வட மத்திய பிராந்திய சேவைகள் நிலையங்களின் மேலதிக பொது முகாமையாளராக பணியாற்றிய எந்திரி திரு பாலசிங்கம் பாரதிதாசன் என்பவரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், நேற்று திங்கட்கிழமை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைமை பணிமனையில் தனது பதவியை பொறுப்பேற்றார்.

எந்திரி. தி. பாரதிதாசன் 1991 இல் இளங்கலை பொறியியல் (சிவில்) பட்டத்தை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும் 11

### இந்திய மீனவர் அத்துமீறல்

## பிரதிவாதியாக வெளிவிவகார அமைச்சை குறிப்பிடுமாறு உயர்நீதிமன்று உத்தரவு!

கொழும்பு, மே 07

இந்திய மீனவர்கள் நாட்டின் வடக்கு கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசிப்பதையும் நாட்டின் மீன் வளத்தை சூறையாடும் இழுவை மடி வலைகளை பயன்படுத்துவதையும் தடுக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவில், வெளிவிவகார அமைச்சை பிரதிவாதியாக குறிப்பிடுமாறு உயர் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டது.

சுற்றாடல் நீதி மையம் மற்றும் வட பகுதி மீனவர்கள் குழுவால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு விஜித் மலல்கொட, காமினி அமரசேகர மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய நீதியரசர்கள் கொண்ட அமர்வில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திருமதி கங்கா வக்கிஷ்ட ஆராச்சி, இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் 11

## மின்சார கட்டணம் ஜூனில் திருத்தம்!

### 20 வீதம் குறைக்க பரிந்துரை

கொழும்பு, மே 07

ஜூன் மாதம் முதல் மின்சார கட்டணத்தை மீண்டும் திருத்துவதற்குத் தயாராகி வருவதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷ்னா ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை தற்போது மின்சார கட்டணம் தொடர்பான வரைவை தயாரித்து 11

## வெப்பத்தால் தசைபிடிப்பு நோய் ஏற்படும் ஆபத்து!

### மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 07

வெப்ப உயர்வால் உப்புகளின் அளவு இரத்தத்தில் குறையும்போது தசைபிடிப்பு ஏற்படும் - இவ்வாறு யாழ். போதனா மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர்களான த. பேரானந்தராஜா, நளாயினி ஜெகதீசன் ஆகியோர் அறிவுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே 11

## சிங்கப்பூர் அதிகாரிகள் வருகின்றனர்

கொழும்பு, மே 07

இலங்கையின் விமான நிலையங்களின் கட்டமைப்பு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டமைப்பை ஆராய்வதற்கு சிங்கப்பூர் நாட்டின் குடிவரவு மற்றும் சோதனைச் சாவடிகள் அதிகார சபை அதிகாரிகள் 11

## யாழ். போதனா மருத்துவமனை சிறந்த சேவை வழங்குகின்றது!

### மக்களுக்கு வீண் அச்சம் வேண்டாம் என்கிறார் சுகாதார அமைச்சர் ரமேஷ்

கொழும்பு, மே 07

யாழ். போதனா மருத்துவமனை என்பது மிகவும் சிறந்த சேவையை வழங்கும் மருத்துவமனையாகும். போதனா மருத்துவமனைகள் தொடர்பில் வெளியாகும் விடயங்கள் தொடர்பில் மக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை - என்று சுகாதார அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று திங்கட்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், போதனா மருத்துவமனைகளில் முன்னெடுக்கப்படும் சத்திர சிகிச்சைகள் வெற்றியளிப் பதில்லை என்று பரப்பப்படும் வதந்திகளில் 11

## உள்ளூர் உற்பத்திகளின் சந்தை வாய்ப்புக்காக சர்வதேச கண்காட்சி!

கொழும்பு, மே 07

உள்ளூர் உற்பத்திகளுக்கு சர்வதேச சந்தைகளில் கேள்வியை அதிகரித்துக் கொள்வதற்காக சர்வதேச கைத்தொழில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு உற்பத்தி கைத்தொழில் முயற்சியாளர்களின் பங்கேற்புடன் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது என்று கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜூன் 19 - 23 வரை இக்கண்காட்சி நடைபெறவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 11

## பயிலுநர் கிராம உத்தியோகத்தராக தெரிவானோருக்கு நாளை நியமனம்!

கொழும்பு, மே 07

பயிலுநர் கிராம உத்தியோகத்தர்களாக தெரிவானோருக்கு நாளை புதன்கிழமை நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

முற்பகல் 10.30 மணிக்கு அலரி மாளிகையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த ஆகியோர் நியமனங்களை வழங்குவர்.

கிராம உத்தியோகத்தர் தரம் 3 இற்கான புதிய ஆட்சேர்ப்பு பட்டியல் நேற்று செவ்வாய்க்கிழமை உள்நாட்டலுவல்கள் 11

## செப்ரெம்பர் மாதத்துக்குள் ஓ. எல். பரீட்சை பெறுபேறு

கொழும்பு, மே 07

நேற்றைய தினம் ஆரம்பமான க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு செப்ரெம்பர் மாதத்துக்குள் வெளியாகும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்காக சுமார் 35 ஆயிரம் ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

நேற்று ஆரம்பமான சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 11

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

தமிழ் அரசியல் பரப்பில் இன்று செயல்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கட்சிகளை இரண்டு வகையாக பார்க்கலாம். அவற்றில் பல கட்சிகளை தமிழ்த் தேசிய அரசியல் சார்ந்த கட்சிகள் என்றும் மற்றைய வற்றை வேறு ஓர் அணியாகவும் பார்க்கின்ற ஒரு போக்கு நம் மத்தியில் உண்டு. அவற்றில் ஒரு சில கட்சிகள் அரசாங்கத்தோடு இணைந்து பணியாற்றுகின்றன. சில அங்கும் இல்லாமல் இங்கும் இல்லாமல் இயங்கிக் கொண்டிருகின்றன.

ஆனால், இந்தத் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று தங்களை வரையறுத்துக்கொள்ளும் கட்சிகளில் தமிழ் அரசு, தமிழ் காங்கிரஸ் மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் இயங்கும் ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பு, விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி தவிர, தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தையும் அப்படி தமிழ் தேசியக் கட்சிகள் என்று பலரும் பட்டியலிட்டு வருகின்றனர்.

இந்தப் பட்டியலில் ஊர்க்குருவிக்கு உடன்பாடு இல்லையானாலும் மேலேயுள்ள அந்தப் பட்டியலில் உள்ள கட்சிகளில் தமிழ் காங்கிரஸ் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்பது என்று திட்டவட்டமாக முடிவெடுத்து அதற்கான அறிவிப்பையும் வெளியிட்டுவிட்டது.

தமிழ் அரசு கட்சியின் ஒரு பிரிவினர் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு ஆதரவாக கருத்துச் சொல்லி வருகின்றனர். ஓர் அணியினர் அதற்கு எதிராக கருத்துச் சொல்லி வருகின்றபோதிலும் இறுதி முடிவை கட்சியின் மத்திய செயல்குழுவே எடுக்கும் என்று நம்பலாம். தற்போதுள்ள நிலையில், அதாவது இதுவரை அதற்கு ஆதரவாக பகிரங்கமாக கருத்துச் சொல்லியுள்ளவர்களில் கணிசமானவர்கள் மத்திய செயல்குழுவில் உறுப்பினர்களாக இருப்பவர்கள். அந்தக் கட்சி பொதுவேட்பாளரை களம் இறக்குகின்ற முயற்சியில் தனது ஆதரவை வெளிப்படுத்தும் என்றே நம்பப்படுகின்றது. அப்படியில்லாமல் தமிழ் அரசு வேறு ஒரு முடிவுக்கு வந்தால் அந்த முயற்சியே வெற்றியளிக்குமா என்ற கேள்வி பலரிடம் உண்டு.

ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பு ஏற்கனவே கொள்கையளவில் அதனை ஒரு தீர்மானமாகவே எடுத்துவிட்டது. விக்னேஸ்வரனின் கட்சி அதற்கு முழு ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கின்றது. பசுமை இயக்கமும் தனது முழு ஆதரவையும் அறிவித்திருக்கின்றது. இந்நிலையில், வழக்கம் போல தமிழ்த் தேசியக் கட்சிகளில் காங்கிரஸ் தவிர்ந்த அனைத்து கட்சிகளும் ஒருமித்த முடிவையே எடுக்க விருக்கின்றனர்.

இதுவரை பொது வேட்பாளர் என்ன கோரிக்கையை முன்வைக்க இருக்கிறார் என்பது இறுதி செய்யப்படவில்லை. அவர்கள் முன்வைக்க விருக்கின்ற கோரிக்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியால் (தமிழ் தேசிய மக்கள் முன்னணி) நிராகரிக்கப்பட முடியாத கோரிக்கையாக இருந்தால் அதனை நிராகரிப்பதுகூட அவர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தலாம். தமிழ் பொது வேட்பாளரை களம் இறக்குகின்ற விடயத்தில் இதுவே தற்போதைய கள நிலவரம்.

கடந்த முப்பதாம் திகதி வவுனியாவில் கூடிய சிவில் சமூக பிரதிநிதிகளும், பொது அமைப்புகளும் புத்திஜீவிகள் சிலரும் அதுகுறித்து ஆராய்ந்து பொதுவேட்பாளரை களம் இறக்குவது என்று முடிவெடுத்ததுடன் அடுத்த கட்டமாக அரசியல் கட்சிகளை தனித் தனியாக சந்தித்து பேசுவது என்றும் அதன்பின்னர் அந்த அமைப்புகளையும் அரசியல் கட்சிகளையும் கொண்ட பொதுக்கட்டமைப்பு ஒன்றை அமைத்து இந்த விடயத்தை முன்னகர்த்துவது என்றும் முடிவெடுத்திருந்தனர்.

ஆனால், அந்தக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாகவே அரசியல் கட்சிகளுடனான சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாலேயே கடந்த சனிக்கிழமையன்று மக்கள் மனு வடக்கு - கிழக்கு சிவில் சமூகம் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தது. அந்தச் சந்திப்பில் முப்பதாம் திகதிய கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் சார்பிலும் சிலர் அழைக்கப்பட்டிருந்தனர். அந்தச் சந்திப்பில் மேலே சொல்லியிருந்த அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் அழைக்கப்பட்டிருந்த அதேவேளை, அதில் கலந்துகொண்ட தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தமது கட்சியின் சார்பில் முடிவெடுப்பதற்காக இரண்டு வார கால அவகாசம் கேட்டிருந்தார்.

ஆக, அவர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து கட்சிகளும் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தன.

ஆனால், அண்மைக்காலமாக பல வேறு தரப்பினரும் அந்த பொது வேட்பாளர் விவகாரம் தொடர்பாக தத்தமது கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

அவர்களின் சந்தேகம் நியாயமானதே. இப்படியொரு பலப்பரீட்சையில் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்காமல் விட்டால், அது தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் போராட்டத்தையும் அதல பாதாளத்தில் கொண்டுவந்து விட்டுவிடும் என்பதே.

அதற்காக அவர்கள் முன்வைக்கின்ற பிரதான குற்றச்சாட்டு ஒருசிலர் சேர்ந்து தமிழ் மக்களின் அரசியல் விடயத்தில் முடிவெடுப்பதா? என்பதுதான்.

இங்கே கவனிக்க வேண்டியது முடிவை ஒரு சிலர் மட்டும் எடுத்து விடமுடியாது. அது அனைத்து அரசியல் கட்சிகளுடன் - அதற்கு ஆதரவான சிவில் அமைப்புகளும் சேர்ந்து தான் முடிவெடுக்க முடியுமே தவிர, இதில் எவரும் தமது விருப்பத்தை திணிக்க முடியாது. ஆனால், இந்தக் கட்சிகளை ஒரணியாக திரட்டி அது குறித்து சாதக, பாதகங்களை பேசி முடிவெடுக்கப் பண்ணுவதற்கு ஒரு சிலர் மத்திரமே பங்களிக்க முடியும்.

அதிலும் வேடிக்கை என்னவென்றால், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பேரவை மட்டுமே பொது வேட்பாளரை களமிறக்கவேண்டும் என்று முடிவெடுத்தபோது அதில் முக்கிய பிரமுகர்களாக இருந்தவர்களும், இப்போது "அது எப்படி ஒரு சிலர் முடிவெடுப்பது" என்று கேட்கிறார்கள். அதாவது, மக்கள் பேரவை தனித்து முடிவெடுத்தபோது அதனை ஏற்றுக்கொண்டவர்கள், இப்போது ஏன் கேள்விக்கு உட்படுத்துகிறார்கள் என்பது தெரியவில்லை.

இந்த விடயத்தில் தலைவர்கள் என்ன முடிவெடுக்கவேண்டும், எது தமிழ் மக்களுக்கு பயனுள்ளது என்று ஆலோசனை வழங்கவேண்டியதே உண்மையாக தமிழ் மக்கள் மீது அக்கறை இருப்பவர்கள் செய்யவேண்டியது. அதைவிடுத்து, அதன் பின்னால் நிற்பவர்கள் யார், அவர்கள் என்ன நிறத்தில் ஆடை உடுத்தியிருக்கிறார்கள் என்பதுபோன்ற ஆராய்ச்சிகள் அல்ல. அது எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை.!

- ஊர்க்குருவி

# வீசா நடைமுறையை மாற்றியது எதற்காக?

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் கேள்வி



எமது நாட்டில் நடைமுறையிலிருந்து வந்த வீசா வழங்கும் திட்டத்தை மாற்றிய மைத்ததன் மூலம் 18. 50 டொலர்களை அறவிட்டு, அந்த வருமானம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. இதனால், எமது நாட்டுக்கு கிடைக்கும் அதிகளவிலான டொலர்களில் இழப்பு ஏற்படுகிறது. இவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துவதன் அடிப்படையும், நோக்கமும் என்ன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பினார்.

தரவுகளை மையப்படுத்திய அறிவியல் ரீதியிலான பகுப்பாய்வுகளின் அடிப்படையிலேயே இத்தகைய முடிவுகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். நாட்டுக்கு நன்மை பயப்பதாக இது அமைய வேண்டும். இதன் சாதக - பாதகங்கள் குறித்தும், நன்மை தீமைகள் குறித்தும் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். இது பிணைமுறி மோசடியை விட பாரதூரமான நிதி மோசடி என பல்வேறு வதந்திகள் பரவி வரும் நிலையில், இது தொடர்பில் உண்மை நிலையை நாட்டு மக்கள் அறிய வேண்டும் - என்றும் சஜித் கூறினார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 177 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் பியகம, பொல்லேகல மகா வித்தியாலத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்து வருமாறு,

நாட்டை ஆள்பவன் ஒரு தற்காலிக பொறுப்பாளனே. எனவே முட்டாள்தனமான கொள்கைகளிலிருந்து விலகி யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். யாரேனும் நல்லது செய்தால் நல்லது என்று கூற வேண்டும். எதிர்க்கட்சியோ அல்லது வேறு யாரேனும் நாட்டுக்கு நல்லது செய்தால் அதைப் பாராட்ட வேண்டும். தான் பேசும் விவாதங்களைப் போலவே செயலிலான விவாதங்களுக்கும் தயார். நாட்டுக்குத் தேவையான பணிகள், தீர்வுகள், பதில்கள் மற்றும் வேலைத்திட்டங்களை நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

மதுவிலக்கு கொள்கையை கடைப்பிடிப்பவன் என்ற முறையில் மது, போதைப் பொருள், சிகரெட் என்பவற்றை நான் பகிர்ந்து வரவில்லை.

நாட்டை வங்குரோத்து நிலைமையிலிருந்து விடுவித்து, மீண்டும் வங்குரோத்து நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான மூலோபாயங்கள் குறித்து யாரும் பேசுவதில்லை. தோல்வி கண்ட கம்யூனிச, மார்க்சிச சித்தாந்தங்களால் எமது நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. தீவிர சோசலிசவாதிகளின் பிள்ளைகள் கூட பணம் செலுத்திப் படிக்கும் தனியார் பாடசாலைகளுக்கே செல்கின்றனர்.

எந்தச் சூழ்நிலையிலும் நாம் அரச பாடசாலைகளை தனியார் மயமாக்க மாட்டோம்.- என்றார். (எ)

# இலங்கை இளையோர் குரலையே விமான நிலையத்தில் ஒலித்தேன்

## வீசா விவகாரம் குறித்து இளைஞன் விளக்கம்

கொழும்பு, மே 07

நமது நாட்டில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டிய வேலைவாய்ப்பை வேறுநாட்டவர்களுக்கு வழங்கியதைப் பார்த்த பின்னரே நான் எதிர்த்துக்குரல் எழுப்பினேன் என்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் எதிர்ப்பை வெளிப்படுத்திய இளைஞன் விளக்கமளித்துள்ளார்.

எனக்கு அரசியல் தொடர்புகள் உள்ளதால் தான் சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளேன் எனத் தெரிவிக்கப்படுவதை நிராகரித்தேன். நான் இலங்கை இளைஞர்களின் குரலையே விமான நிலையத்தில் ஒலித்தேன். இலங்கையின் அரசமைப்பின்படி செயல்பட்டேன் எனவும் அந்த இளைஞன் விளக்கமளித்தார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் வருகை வீசாக்களைக் கையாளும் பொறுப்பினை இந்திய நிறுவனத்திடம் ஒப்படைத்தமைக்கு விமான நிலையத்தில் வைத்து எதிர்ப்புத் தெரிவித்த இளைஞன் விமான நிலைய பொலிஸாரால் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளதாக கட்டுநாயக்கா விமான நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். ஆவணங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட விமான நிலையத்தின் குடிவரவுத் துறை அதிகாரிகளிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (எ)


## வெட்டிய மரக்குற்றிகளுடன் ஐவர் கல்மடு வனத்தில் கைது!

கிளிநொச்சி, மே 07

கிளிநொச்சியில் அரசுக்கு சொந்தமான கல்மடு வனப் பிரதேசத்துக்குள் அனுமதியின்றி நுழைந்து மரங்களை வெட்டினர் என்ற குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்ட மரக்குற்றிகளுடன் இவர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட ஐவரும் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ்



பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.05.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், சித்திரை 2024

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அரசியல் தீர்மானங்களில் மக்கள்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான உரையாடல்கள் சற்றுத் தீவிரமடைந்திருக்கின்றன. இதுவரையில், இறுதித் தீர்மானங்கள் எட்டப்படாவிட்டாலும்கூட விடயம் அதிக கவனத்தைப் பெற்றிருக்கின்றது. இதேவேளை, இந்த நிலைப்பாட்டை எதிர்ப்பவர்கள் மத்தியில் பதற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. ஏனெனில், இந்த விடயம் இந்தளவு பேசுபொருளாக மேலே வருமென்று அவர்கள் எண்ணியிருக்கவில்லை. இதன் காரணமாகவே அவர்கள் பதற்றமடைகின்றனர்.

இது ராஜபக்ஷக்களை உயிர்பெறச் செய்யுமென்று சுமந்திரன் கூறமுற்பட்டார். ஆனால், அவரின் கட்சியினரே சுமந்திரனின் அபிப்பிராயத்தை ஒரு விடயமாக எடுக்கவில்லை. மக்கள் மத்தியில் இவ்வாறான வாதங்களுடன் முன்னர் சென்றது போன்று செல்ல முடியாது. ஏனெனில், கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் மக்கள் போதிய பாடங்களை படித்துவிட்டனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தற்போது எதிர்க்க முற்படுபவர்கள் பிறிதொரு கோஷத்துடன் தங்கள் தலையை நீட்டுகின்றனர். அதாவது, இது ஒரு சிறிய குழுவினரின் கருத்தாகும் - இவர்கள் மக்களுடன் கலந்துரையாடி முடிவுகளை எடுக்கவில்லை.

அரசியல் தீர்மானங்களில் மக்களுடன் கலந்துரையாடுதல் என்றால் என்ன? யுத்தத்துக்கு முன்னரும் சரி, யுத்தத்துக்கு பின்னரும் சரி எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இலட்சக்கணக்கான மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் சம்மதத்துடனா எடுக்கப்பட்டது? மக்கள் சார்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும்போது பொதுவான முறைமை ஒன்றே கடைப்பிடிக்கப்படுவதுண்டு.

மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் - அதேவேளை குறித்த பொது நிலைப்பாட்டை ஆதரிக்கும் புத்திஜீவிகள், கல்விமான்கள், மதத் தலைவர்கள் ஆகியோர் ஒன்றுகூடியே தீர்மானங்களை எடுப்பதுண்டு. அவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மக்களால் ஆதரிக்கப்படும்போது, அதற்கான மக்கள் ஆணை பெறப்படுகின்றது. இவ்வாறுதானே இதுவரையான முடிவுகள் அனைத்தும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அதிலும் குறிப்பாக கடந்த பதினைந்து வருடங்களில் இவ்வாறான அணுகுமுறையில்கூட, அரசியல் தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை. சம்பந்தன் அவருடன் சுமந்திரன் என்னும் அடிப்படையில்தான் பெரும்பாலான முக்கிய அரசியல் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அப்போதெல்லாம் எவருமே இது மக்களின் முடிவு இல்லையே என்று கூற முற்பட்டதில்லை. தனிநபர்களின் முடிவுகளை நியாயப்படுத்துபவர்களாகவே இருந்திருக்கின்றனர்.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்னும் தீர்மானம் பெரும்பாலான தரப்புகளால் உடன்பாடு காணப்பட்டு, அதற்கான கொள்கை ரீதியான இணக்கப்பாடு எட்டப்படுமாக இருந்தால் அது மக்களால் ஆதரிக்கப்படும். இவ்வாறுதான் கடந்த காலத்தில் மக்கள் அனைத்துத் தீர்மானங்களையும் ஆதரித்திருக்கின்றனர். இனியும் ஆதரிப்பார்கள். மக்கள்மீது நம்பிக்கையில்லாவிட்டால் தமிழ் மக்கள் சார்பில் நிலைப்பாடுகளை முன்வைக்கும் உரிமையையும் எவரும் எடுத்துக் கொள்ளக்கூடாது.

# வட மாகாண அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை நோர்வே வழங்கும்

## அந்நாட்டு தூதுவர் ஆளுநரிடம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 07

வடக்கு மாகாண அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்புக்களைத் தொடர்ந்து வழங்குவதாக இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஆளுநரிடம் தெரிவித்தார்.

நோர்வேத் தூதுவர் மே-எலின் ஸ்டெனர், வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார். யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநரின் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் மீள்குடியேற்ற நடவடிக்கையின் முன்னேற்றங்கள், காணி விடுவிப்பு, கண்ணிவெடி அகற்றல் செயல்பாடுகள், சுற்றுலாத்துறை அபிவிருத்தி, கல்வி, இயற்கை சக்தி வள்ங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும், சுற்றுலா வழிகாட்டிகள் போதிய எண்ணிக்கையில் இல்லை எனவும், தங்குமிட வசதிகள் போதுமான அளவு இல்லை எனவும் குறிப்பிட்ட ஆளுநர், சுற்றுலாத் துறையை மேம்படுத்த முதலீடுகள் தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

கற்றல் செயல்பாடுகள் மற்றும் தொழிற்கல்வியைப் பெற முடியாது போகும். இளைஞர், யுவதிகள் தொடர்பில் மாற்று வழிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

விடயங்களைக் கேட்டறிந்து கொண்ட இலங்கைக்கான நோர்வேத் தூதுவர், வடக்கு மாகாண அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை தொடர்ச்சியாக வழங்கத் தயார் எனவும், ஒருங்கிணைந்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

(எ)

# பாதுகாப்பைக் கோரும் எதிர்க்கட்சி எம்.பிக்கள்!

கொழும்பு, மே. 07

அரசாங்கத்திலிருந்து எதிர்க்கட்சிக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்க எதிர்க்கட்சியின் குழுவொன்று தயாராகவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அண்மையில் உள்ளக கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

தன் உயிருக்கு அச்சுறுத்தலாகும் வகையில் யாரோ ஒருவர் மூலம் உணவில் விஷம் கலந்திருந்ததாக முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அரசாங்கத்தின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய உயிருக்கும் அச்சுறுத்தல் உருவாக முடியும் என்ற அச்சத்தில் இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க அவருக்கு முன்வைக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் தொடர்பில் அண்மையில் தெரிவித்த கருத்து மிகத் தீவிரமானது எனவும் இது தொடர்பில் அரசாங்கம் உடனடியாக விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனவும் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருந்தனர்.


அரசாங்கத்தின் ஊழல் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் வெளிப்படுத்தும் கடமை அமைச்சர்களுக்கு உண்டு எனவும் அவ்வாறு வெளிப்படுத்தும் அமைச்சர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுமெனில் அது ஜனநாயகத்துக்கு விழும் ஒரு மரண அடி எனவும் டலஸ் அழகப்பெரும அறிவித்தல் ஒன்றை விடுத்து தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை விமர்சிக்கும் எதிர்க்கட்சியின் உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அக்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் இணைந்து எதிர்வரும் வாரங்களில் கையொப்பமிட்டு ஆவணமொன்றை அதிகாரிகளுக்கு வழங்க தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, இன்று பாராளுமன்றம் கூடவுள்ள நிலையில் இது தொடர்பில் கருத்து தெரிவிக்க எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 07 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 24
நல்ல நேரம் : 07.30 - 09.30
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : அமாவாசை




### மேடம்

குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

### இடபம்

குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

### மிதுனம்

உங்களின் இலக்க்க நோக்கி முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். வியாபாரத்தில் புகழ்பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். சாதிக்கும் நாள்.

### கடகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

### சிம்மம்

சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும்.

### கன்னி

சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

### துலாம்

குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

### விருட்சிகம்

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில்உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

### தனுசு

எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். திருப்தி உண்டாகும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

### மகரம்

குடும்ப்த்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நினைத்தை முடிப்பீர்கள்.

### கும்பம்

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

### மீனம்

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் அவ்வப்போது டென்ஷன் ஆவீர்கள்.

# மோடியிடம் விளக்கம் கேட்கவே தேர்தல் ஆணையத்துக்கு அச்சம்

## திருமாவளவன் சாடல்

சென்னை, மே 07

பிரதமர் நரேந்திர மோடியிடம் விளக்கம் கேட்பதற்கு கூட தேர்தல் ஆணையம் அஞ்சுகிறது என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

நேற்று சிதம்பரத்தில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "தொடக்கத்தில் இருந்து இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் அதிர்ச்சி அளிக்கும் வகையில் உள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்தின் அணுகுமுறை ஒரு சார்பாக இருக்கிறது. தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் பா. ஜ. கவுக்கு சாதகமான அணுகுமுறையாக இருக்கிறது.



தேர்தல் பரப்புரை விவகாரங்களில் யார் மீது குற்றம் சுமத்தப் படுகிறதோ அவருக்கு விளக்கம் கேட்டு அறிக்கை அனுப்ப வேண்டும். அப்படி பிரதமர் நரேந்திர மோடிக்கு விளக்க கேட்டு அறிக்கை அனுப்ப வேண்டிய தேர்தல் ஆணையம், அதற்கு மாறாக பா. ஜ. க. தேசிய தலைவர் ஜே. பி. நட்டாவுக்கு அனுப்பியது ஏன்? என்று விளங்கவில்லை. பிரதமர் நரேந்திர மோடியிடம் விளக்கம் கேட்பதற்கு கூட தேர்தல் ஆணையம் அஞ்சுகிறது - என்றார். (ஐ)

# ஆதித்த கரிகால சோழனின் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது

விழுப்புரம், மே 07

விழுப்புரம் அருகே உள்ள ஏமப்பூர் கிராமத்தில் வேதபுரீஸ்வரர் கோயிலில் திருப்பணியின் போது ஆதித்த கரிகால சோழனின் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இது குறித்து பேராசிரியர் ரமேஷ் கூறியவை வருமாறு,

"சோழ மன்னன் சுந்தர சோழனின் மகனும் புகழ்பெற்ற சோழ மன்னன் ராஜராஜனின் தமையனுமான ஆதித்த கரிகாலன், பாண்டிய மன்னன் வீரபாண்டியனை போரில் தோற்கடித்து அவன் தலையை வெட்டிக் கொண்டு வந்து தஞ்சை அரண்மனை முன்பு சொருகி வைத்தான் என்று திருவாலங்காடு, எசாலம், லெய்டன் ஆகிய செப்பேடுகள் கூறுகின்றன. எனவே, இவன் வீரபாண்டியன் தலை கொண்ட கோப்பரகேசரி என்று அழைக்கப்பட்டான்.

சுந்தர சோழன் தன் மகன் ஆதித்த கரிகாலனுக்கு தொண்டை மண்டலம், திருமுனைப்பாடி ஆகிய பகுதிகளை ஆளும் உரிமையை வழங்கி இருக்கிறான். எனவே, தான் இப்பகுதியில் இவனின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. ஏற்கெனவே பேரங்கியூர், திருமுண்டீஸ்வரம் போன்ற இடங்களில் கிடைத்திருக்கிறது. தற்போது மேலும் ஒரு கல்வெட்டு கிடைத்திருக்கிறது.

இக்கல்வெட்டு 'ஸ்வஸ்தி சிறீ வீரபாண்டியன் தலை கொண்ட கோப்பரகேசரி' என்று தொடங்குகிறது இவனது நான்காவது ஆட்சி ஆண்டான பொது ஆண்டு 960 பொறிக்கப்பட்ட கல்வெட்டு திரு முனைப்பாடி நாட்டில் ஏமப்பேரூர் நாட்டு ஏமப்பேரூர் என்று இந்த ஊரை அழைக்கிறது. இது ஒரு நாட்டின் தலைமையிடமாக விளங்கி இருக்கிறது.

மேலும், இவன் சதியால் கொல்லப்பட்டான் என்பதை காட்டுமன்னார் கோயில் அருகில் உள்ள உடையார்குடி ஆனந்தீஸ்வரர் கோயில் கல்வெட்டு குறிப்பிட்டதோடு அவர்களின் பெயர் பட்டியலையும் தெளிவாக தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு தமிழக சோழர் வரலாற்றில் குறிப்பிடத்தகுந்தது" என்றார். (ஐ)

# செந்தில் பாலாஜி வழக்கு ஒத்திவைப்பு

புதுடில்லி, மே 07

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி உச்சநீதிமன்றில் தொடுத்த வழக்கு ஒத்திவைக்கப் பட்டது.

சட்டவிரோத பண பரிமாற்ற தடை சட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு கடந்த 10 மாதங்களுக்கு மேலாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரின் பிணை மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மேன்முறையீட்டுக்காக உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப் பட்டது.

இந்த வழக்கு விசாரணை நேற்று விசாரணைக்கு எடுக்கப் பட்டது. சட்ட அமுலாக்கத் துறை வழக்கை ஒத்திவைக்கக் கோரியதால் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப் பட்டது. (ஐ)

# சவுக்கு சங்கர் கைதானார்!

சென்னை, மே 07

பிரபல யூ ரியூபர் சவுக்கு சங்கர் தேனியில் கைது செய்யப் பட்டார். கோவை சைபர் க்ரைம் பொலிஸார் அவரை கைது செய்தனர்.

பொலிஸ் அதிகாரிகள், பெண் பொலிஸாரை அவதூறாகப் பேசியதாக அவர் மீது கோவை சைபர் க்ரைம் பொலிஸ் வழக்கு தொடர்ந்திருந்தது. இதையடுத்தே, அவர் கைது செய்யப் பட்டார்.

சவுக்கு சங்கர் கைதுக்கு தமிழக எதிர்க்கட்சித் தலைவரும், அ. தி. மு. க. பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி தனது கண்டனம் தெரிவித்துள்ளார். (ஐ)

# தலைசிறந்த மருத்துவர்கள் 'நீட்' மூலம் உருவெடுப்பர்!

சென்னை, மே 07

நீட் பரீட்சை மூலம் தமிழகத்தில் இருந்து தலைசிறந்த மருத்துவர்கள் உருவெடுப்பார்கள் என பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தமிழகத்தில் மருத்துவக்



கல்வி இடங்களை கடந்த 10 ஆண்டுகளில் 2 மடங்காக உயர்த்தியுள்ள பிரதமர் மோடி வரும் ஆண்டுகளில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி என்ற இலக்கையும் நிச்சயம் நிறைவேற்றுவார். நீட் தேர்வு மூலம், நமது குழந்தைகள் தலை சிறந்த மருத்துவர்களாக உருவெடுப்பார்கள் என்பது உறுதி - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமத்திய மாகாண சபை கட்டடத்தை முற்றுகையிட்ட 22 பட்டதாரிகள் கைது!

## ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளை தடுத்து வைத்தனர்

கொழும்பு, மே. 07

**மாகாண சபை ஆளுநர், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை மாகாண சபை கட்டட வளாகத்திற்குள் அடைத்து, நுழைவு மற்றும் வெளியேறும் கதவுகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட 22 வேலையற்ற பட்டதாரிகள் நேற்று கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் உள்ளிட்ட அதிகாரிகளே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்டவர்களில் அகில இலங்கை ஐக்கிய வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் முன்னாள் அழைப்பாளர் தம்மிக்க முனசிங்க உட்பட 11 ஆண்களும் 11 பெண்களும் அடங்குவர்.

பொலனறுவை, வெலிகந்தை போன்ற தொலைதூர பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் சிறு குழந்தைகளுடன் இந்த இடத்துக்கு வந்துள்ளனர். வடமத்திய மாகாணத்தில் உள்ள வெற்றிடங்களைவிட மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகள் குறைவாக இருப்பதால் அவர்களுக்கு ஏன் வேலை வழங்கப்படவில்லை என இக்குழுவினர் கேள்வி எழுப்பினர்.



நேற்றுக் காலை 10 மணியளவில் மாகாண சபையின் பிரதான வாயில் ஊடாக மாகாண சபை வளாகத்தினுள் நுழைந்த இவர்கள் வடமத்திய மாகாண சபையின் அனைத்து நுழைவாயில்கள் மற்றும் வெளியேறும் வாயில்களை அடைத்து தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# சரத் பொன்சேகாவுக்கு எதிரான மனு விசாரணை 21 ஆம் திகதி!

கொழும்பு, மே. 07

பாராளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் கட்சி உறுப்புரிமை மற்றும் அவர் வகிக்கும் பதவிகளில் இருந்து அவரை நீக்குவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவை இடைநிறுத்துமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி தாக்கல் செய்த சீராய்வு மனுவை பரிசீலிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் திகதி நிர்ணயித்துள்ளது.

இந்த மனு நேற்று அழைக்கப்பட்டபோது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி.என். சமரக்கோன் இம்மாதம் 21ஆம் திகதி இந்த மனுவை விசாரிக்க உத்தரவிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்டோரால் இந்த மீளாய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

# அரச அலுவலர்களுக்கு வரிச் சலுகையுடன் கூடிய வாகன இறக்குமதி உரிமம் விரைவில்

கொழும்பு, மே. 07

ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்கள், மாகாண அரச உத்தியோகத்தர்கள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கு வரிச்சலுகையுடன் கூடிய வாகன இறக்குமதி உரிமம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கட்டாய ஓய்வு பெறும் வயதெல்லை 65 வரை நீடித்து, பின்னர் ஓய்வு பெறும் வயதெல்லை 60 ஆக குறைக்கப்பட்ட நிலையில், அதற்கிடையிலான காலத்தில் 60 வயது பூர்த்தியான பின்னர் ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்காக இந்த வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்னவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதர தேவைகளை பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்களுக்கு வரிச்சலுகையுடன் கூடிய வாகன இறக்குமதி உரிமம் வழங்க கடந்த மார்ச் 11ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# 14 மில்லியன் டொலர் பெறுமதியான வாகனங்கள் 3 மாதங்களில் இறக்குமதி

கொழும்பு, மே. 07

ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியில் 14 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான, தனியார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையின்படி, இந்த ஆண்டு ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு இடையில் 14.4 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தனியார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், மார்ச் மாதத்தில் மட்டும் இறக்குமதி செய்யப்பட்ட தனியார் வாகனங்களின் பெறுமதி 4.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களுக்கு மேலதிகமாக, ஜனவரி முதல் மார்ச் வரையிலான மூன்று மாதங்களில் 102.6 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான காய்கறிகள் (மைசூர் பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு, பருப்பு வகைகள் மற்றும் பிற காய்கறிகள்) இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

மேலும் அந்தக் காலப்பகுதியில் 34.8 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மசாலாப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மருத்துவ கல்வி தொடர்பில் தேசிய கொள்கை வேண்டும்!

கொழும்பு, மே. 07

நாட்டில் மருத்துவக் கல்வி தொடர்பில் தேசிய கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மருத்துவச் சபை இது குறித்து தீர்மானித்துள்ளது.

நாட்டின் மருத்துவக் கல்வியை விஸ்தரிப்பதற்கு முன்னர் தேசிய கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்வியை விஸ்தரிக்கும்போது தற்போதைய மருத்துவ பீடங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அதனை மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

மேலும், மருத்துவ கல்விக்கான அடிப்படை தகைமைகள் மாற்றம் செய்யப்படக்கூடாது என சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்க மருத்துவ பீடங்களில் நிலவி வரும் ஆளணி வளப் பற்றாக்குறை மற்றும் மருத்துவ வசதிகள் வரையறுக்கப்பட்டுள்ளமை குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நான்கு தனியார் மருத்துவ கல்லூரிகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 30 கிலோ கேரளக் கஞ்சா வடமராட்சி கிழக்கில் மீட்பு

யாழ்ப்பாணம், மே. 07

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் நேற்று அதிகாலை வவுனியா பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட திடீர் விசேட நடவடிக்கையின்போது 30 கிலோ 500 கிராம் கேரள கஞ்சாவை மீட்டதுடன் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் போதைப்பொருள் கைமாறுவதாக வவுனியா விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா பொலிஸ் நிலைய போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான பொலிஸ் பிரிவினர் திடீர் சோதனை நடவடிக்கையை மருதங்கேணி பகுதியில் முன்னெடுத்தனர்.

இதன்போது போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ். வடமராட்சி கிழக்கு பிரதேசத்தை சேர்ந்த 36,35 ஆகிய வயதுடைய இரு நபர்களை கைது செய்துள்ளமையுடன் அவர்களிடமிருந்து 30 கிலோ 500 கிராம் கேரள கஞ்சாவை வவுனியா பொலிஸ் நிலையப் போதைப்பொருள் ஒழிப்பு பொலிஸ் பிரிவினர் மீட்டெடுத்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா ஆகியவை மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸ் நிலைய போதைப் பொருள் ஒழிப்பு பொலிஸ் பிரிவினருடன் இணைந்து மருதங்கேணி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# 1343 சாதாரண தர மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளில் மாற்றம்

கொழும்பு, மே. 07

கடந்த ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் 1343 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இவ்வாறு மாற்றம் பதிவாகியுள்ளன.

பரீட்சை பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென மொத்தமாக 118, 485 மாணவர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந்த மீள் பரிசீலனை பெறுபேறுகள் கடந்த 4ம் திகதி நள்ளிரவு வெளிளியிடப்பட்டது.

இலங்கை பரீட்சை திணைக்களத்தின் அதிகாரபூர்வ இணையதளமான **www.doenets.lk** அல்லது **www.resulte.exams.gov.lk** என்ற இணைய தளத்தின் ஊடாக பரீட்சை பெறுபேறுகளை பார்வையிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# விரைவில் அமைச்சராகும் மொட்டுக் கட்சியின் எம்.பி

கொழும்பு, மே. 07

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் அமைச்சராக ஒருவர் விரைவில் நியமிக்கப்படவுள்ளார் என்று தெரியவருகின்றது.

பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அரசியல்வாதியே இவ்வாறு அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார் என்று அறிய முடிகின்றது.

2000 ஆம் ஆண்டு முதல் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வரும் இவர், இதற்கு முன்னர் பல அரசுகளில் அமைச்சர் பதவிகளை வகித்துள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவருக்கு என்ன அமைச்சுப் பதவி கிடைக்கும் என்பது இது வரை வெளியாகவில்லை என்று கூறப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கே மொட்டு பேராதரவு வழங்கவேண்டும்

## எஸ்.பி.திஸாநாயக்க கோரிக்கை



கொழும்பு, மே. 07

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு, என்பதால் அந்தத் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முழு ஆதரவு வழங்க வேண்டும் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான கருத்துக்கள் மாத்திரம் வெளிப்பட்டதே தவிர தொழிலாளர்களின் உரிமை பற்றி எந்த அரசியல் கட்சி மேடைகளிலும் பேசப்படவில்லை. மே தினக் கூட்டம் அரசியல் கூட்டமாக மாற்றமடைந்துள்ளமை கவலைக்குரியது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் பலமுறை முன்வைத்துள்ள போதும் ஜனாதிபதியிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தும் சூழல் காணப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகைமை ஜனாதிபதி ரணிலுக்கு உண்டு. எனவே, அந்தத் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முழு ஆதரவு வழங்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தல் ஊடாக அரசை அமைப்பது குறித்து பொதுஜன பெரமுன விசேட கவனம் செலுத்த வேண்டும்.

இந்நிலையில், பொதுஜன பெரமுனவைப் பலப்படுத்தும் பொறுப்பு கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் கட்சிக்குள் இணைத்துக்கொள்ளுமாறு கட்சியின் தலைவர்கள் மற்றும் தேசிய அமைப்பாளரிடம் வலியுறுத்தியுள்ளேன்.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ச இவ்விடயம் குறித்து பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் பேச்சில் ஈடுபட்டுள்ளார்.

மேலும், கட்சியில் இருந்து விலகிச் சென்ற சிரேஷ்ட உறுப்பினர்களை மீண்டும் இணைத்துக்கொண்டு ஒன்றிணைந்து செயற்பட்டால் பொதுஜன பெரமுன தலைமையில் பலமான அரசை அமைக்கலாம்-என்றார். (அ)



# தாவர தனிமைப்படுத்தல் நிலையம் திறந்துவைப்பு

கொழும்பு, மே. 07

தாவர பாகங்கள் மற்றும் தாவரம் தொடர்பான பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்குத் தேவையான தனிமைப்படுத்தப்பட்ட சான்றிதழ்களை வழங்கும் நிலையம் ஒன்று காலியில் திறந்துவைக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் தனிமைப்படுத்தல் சேவைகளைப் பெறுவதற்கு பெருமளவு பணத்தைச் செலுத்தி நேரத்தையும் உழைப்பையும் செலவிட வேண்டியுள்ளதாக ஜனாதிபதி செயலகத்திற்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய பிராந்திய மட்டத்தில் தனிமைப்படுத்தல் சேவையை விரிவுபடுத்துவதற்காக கொழும்பு மத்திய தபால் நிலையத்திற்கு மேலதிகமாக யாழ்ப்பாணம் மற்றும் கண்டி தபால் நிலையங்களில் தாவர தனிமைப்படுத்தல் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

காலியில் உள்ள தாவர தனிமைப்படுத்தல் நிலையத்தைத் திறந்துவைக்கும் நிகழ்வில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, விவசாய அமைச்சின் செயலாளர் ஜனக தர்மகீர்த்தி மற்றும் விவசாயத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கமணி ரணதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# புனரமைக்கப்படவுள்ள பாராளுமன்ற கட்டடம்!

கொழும்பு, மே. 07

40 வருடங்கள் பழமையான பாராளுமன்ற கட்டடத்துக்கு தேவையான புனரமைப்பு பணிகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அண்மையில் நடைபெற்ற பாராளுமன்றப் பணியாளர் ஆலோசனைக் குழுவின் அமர்வின்போது பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்குத் தேவையான அவசரமான புனரமைப்புப் பணிகள் அடையாளம் காணப்பட்டன.

இதற்கமைய, நகர்ப்புற மேம்பாட்டு ஆணையம் மற்றும் மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் ஆகியவற்றின் ஆதரவுடன் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த ஆண்டுக்கான ஒதுக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டுக்கு உடனடியாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சபாநாயகர், சபைத் தலைவர், கல்வியமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைக் கொண்ட ஆலோசனைக் குழு தேவையான நிதியை வழங்குவதற்கான கொள்கை உடன்பாட்டை எட்டியது-என்றார்.

முன்னதாக, 1979ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரணசிங்க பிரேமதாச ஜயவர்தனபுர கோட்டை தியவன்னா ஓயாவில் ஐந்து ஹெக்ரேயர் நிலப்பரப்பில் புதிய பாராளுமன்ற கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு அப்போதைய பாராளுமன்றத்தில் அனுமதி பெற்றார்.

அதனை தொடர்ந்து, கட்டடத்தின் வடிவமைப்பு, கட்டடக் கலைஞர் ஒருவரால் வடிவமைக்கப்பட்டதுடன் ஜப்பானிய கூட்டமைப்பின் 25.4 மில்லியன் டொலருக்கும் அதிகமான செலவில் கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், திட்டமிடப்பட்ட 26 மாத காலத்திற்குள் இத்திட்டம் முடிக்கப்பட்டு 1982ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 11 வேலைத்திட்டங்களை விரைவாக முடியுங்கள்!

## அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தல்

கொழும்பு, மே. 07

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 11 வேலைத்திட்டங்களின் பணிகளை நிறைவு செய்யுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

திறைசேரியின் நிதியைப் பயன்படுத்தி இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அதன்படி, 11 திட்டங்களுக்காக திறைசேரி 1000 மில்லியன் ரூபாவை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒதுக்கியுள்ளது. அந்தப் பணத்தைப் பயன்படுத்தி இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு அதன் மூலம் இந்த 11 அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

இதன்படி, 100 நகர வசதிகளை மேம்படுத்துவதற்கும் நகர அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கும் 600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அரச நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்காக திறைசேரியால் 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டங்களுக்கு அதிக பணம் தேவைப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் தெரிவித்தனர். தேவையான நிதியை ஒதுக்குவது தொடர்பில் திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

கம்பஹா பொதுச்சந்தை அபிவிருத்தி, பாணந்துறை சந்தை மற்றும் பல்நோக்கு கட்டிட அபிவிருத்தி, அவிசாவளை பொது சந்தை அபிவிருத்தி, நிந்தவூர் கடற்கரை பூங்கா நிர்மாணம், முல்லைத்தீவு பஸ் நிலைய நிர்மாணம், அலவ்வ பொது சந்தை அபிவிருத்தி, வரகாபொல பஸ் நிலைய அபிவிருத்தி, மினுவாங்கொடை பொது சந்தை, உத்தேச ஹொரண பொதுச் சந்தை திட்டம் மற்றும் நிர்மாணம், கேகாலை பஸ் டிப்போவை இடம் மாற்றுதல், அலவ்வ பாதசாரி பாதை மற்றும் போக்குவரத்து நிறுத்தம் அபிவிருத்தி செய்தல் ஆகிய 11 செயற்திட்டங்கள் ஆகும்.

இந்த திட்டங்களின் கீழ், நகர மையத்தில் நிறுவப்பட்டுள்ள சட்டவிரோதமான கட்டடங்களை அகற்றுதல், புதிய நடைபாதைகளை புனரமைத்தல் அல்லது புதிதாக நிர்மாணித்தல், ஏற்கனவே உள்ள வாகன நிறுத்துமிட அபிவிருத்தி, குப்பைகளை அகற்றுவதற்கு பொருத்தமான திட்டங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் பிற பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒழுங்கமைக்கப்படாத மற்றும் ஒழுங்கற்ற அபிவிருத்தியடைந்த பிரதேச நகரங்களை மீள் அபிவிருத்தி செய்வதன் மூலம் பிரதேச நகரங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகளை குறைக்க வேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார். (அ)

# போதைப்பொருளுக்கு பணம் தராததால் மகனை தூக்கித் தரையில் அடித்த தந்தை

கொழும்பு, மே. 07

போதைப்பொருள் வாங்க பணம் கேட்டு மனைவியுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஏழு வயது மகனை தரையில் அடித்து பலத்த காயம் ஏற்படுத்திய சம்பவம் ஒன்று கொழும்பு கிராண்ட்பாஸ்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு, தனது ஏழு வயது மகனை தனது கணவர் தரையில் அடித்ததாக பெண் ஒருவர் கிராண்ட்பாஸ் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

தனது கணவர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமை[illegible]யானவர் எனவும், போதைப் பொருள் வாங்க பணம் கேட்டு தன்னையும் பிள்ளையையும் தொடர்ந்து துன்புறுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவத்தன்று தனது கணவர் [illegible] வந்த தனது 7 வயது மகனை தூக்கி தரையில் கொடூரமாக தாக்கியதாகவும் அந்த பெண் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் உடனடியாக செயற்பட்ட பொலிஸார், சந்தேக நபரைக் கைது செய்தனர். தரையில் விழுந்து படுகாயமடைந்த சிறுவன் கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சந்தேக நபர் போதைப்பொருள் பாவனைக்காக பல சந்தர்ப்பங்களில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி வேட்பாளராக தகுதியானவரை நியமிக்குக!

## பொதுஜன பெரமுன வலியுறுத்து

கொழும்பு, மே. 07

**ஜனாதிபதி வேட்பாளராக ஒருவரை தெரிவு செய்தற்கு முன், அவரின் வாழ்க்கை வரலாறு மற்றும் எவ்வாறான வேலைத் திட்டங்களை செய்திருக்கின்றார் என்பது குறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**



பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது, ஜனாதிபதி வேட்பாளரை தேர்ந்தெடுக்கும் போது, தற்போதைய நிலை குறித்தும், எதிர்கால நாட்டின் நிலை பற்றியும் சந்தித்துச் செயல்பட வேண்டும் என அவர் கூறினார்.

மேலும், எமது கட்சியிலிருந்து தகுதியான ஒருவரின் பெயர் குறிப்பிடப்படும். அது குறித்து தாம் இன்னும் தீர்மானிக்கவில்லை என தெரிவித்த அவர், மக்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் நம்பிக்கை ஏற்படும் வகையில், தாம் முடிவொன்றை எடுப்போம் எனவும் குறிப்பிட்டார்.

நாடு தற்போது ஓரளவுக்கு முன்னேற்றமடைந்து வருவதாகவும், ஜனாதிபதி என்ற பதவிக்கு முழு அனுபவம் கொண்ட ஒருவரே தேவை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி என்ற பதவியை தாமே வைத்திருப்பதை விட, தகுதியானவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் எனவும் சமல் வலியுத்தினார்.

போட்டியிட அனைவருக்கும் ஆசை உள்ளது. எனினும், ஜனாதிபதி பதவிக்கு பரிந்துரைக்கப்படும் நபரொருவர், எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளார்? பொறுப்புக்களை பொறுப்பேற்றுள்ளாரா? அவற்றை சரியாக நிறைவேற்றியிருக்கிறாரா? அவருக்கு முன் அனுபவம் இருக்கிறதா? என்பது குறித்து ஆராய்ந்தே தீர்மானிக்க வேண்டும் எனவும் சமல் ராஜபக்ச குறிப்பிட்டார்.

# மன்னாரில் உள்ள பாடசாலைகளில் தொடரும் ஆசிரியர் பற்றாக்குறை!

மன்னார், மே. 07

மன்னார் மாவட்டத்தில் தொடர்சியாக தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்ற நிலையில் உயர்தர பாடங்களை கற்பிக்க ஆசிரியர்கள் இன்மையால் உயர்தர கல்வி நடவடிக்கை பாதிப்படைந்துள்ளதாக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் மற்றும் பெண்கள் கல்லூரி அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் விரைவில் நடவடிக்கை மேற்கொண்டு தேசிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிவர்த்தி செய்து தருமாறு கோரி நேற்று குறித்த பாடசாலை அதிபர்கள் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட செயலாளரிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

குறிப்பாக நீண்ட காலமாக நிலவும் ஆசிரியர் வெற்றிடம் காரணமாக உயர்கல்வி பிரிவுகளை நடத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் சில கற்கைகளுக்கு முழுமையான ஆசிரியர் பற்றாகுறைகாரணமாக பாட நெறியை நிறுத்தவேண்டிய நிலையும் காணப்படுவதாகவும் குறித்த மகஜரில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதே நேரத்தில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவகையில் தளபாடங்கள் இல்லை எனவும் தற்காலிகமாக பலகைகளை இணைத்தே சில வகுப்பினருக்கு கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மாணவர்களுக்கான கட்டடத் தேவைகள் அதிகமாக காணப்படுவதாகவும் சில கட்டடங்கள் அமைச்சுக்களால் நிதி ஒதுக்கப்பட்டு பகுதி அளவில் மாத்திரம் கட்டப்பட்டு அறைகுறை நிலையில் காணப்படுவதாகவும் இதனால் பாடசாலை நிர்வாகம் பல சவால்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்து குறித்த விடயங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட செயலாளர் இணைந்து தீர்வை பெற்றுத்தர கோரி குறித்த மகஜரை கையளித்துள்ளனர்.

(அ)

# வரியற்ற வாகன இறக்குமதி அனுமதி பத்திரங்களை விற்ற அரச அதிகாரிகள்

கொழும்பு, மே. 07

அரசாங்கத்தின் நிர்வாக மட்டத்திலான அதிகாரிகள் சுமார் 200 பேர் அவர்களுக்கு வழங்கப்பட்ட வரியற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை விற்பனை செய்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் தங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வரியற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களைப் பொருளாதார நெருக்கடி காரணமாக சுமார் இரண்டு தொடக்கம் மூன்று இலட்சங்களுக்கு, வாகன விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு முன்னரே வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க முன் அரசாங்கத்தின் நிர்வாக மட்டத்திலான அதிகாரிகளுக்கு வரியற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை வழங்க அரசாங்கத்தின் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக குறித்த செய்தியில் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர்களுக்கு முதலாவதாக வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டால், தவறான ஒரு கண்ணோட்டம் சமூகத்தில் பரவ வாய்ப்புள்ளது.

இதன் காரணத்தினால், முதலாவதாக அரசாங்கத்தின் நிர்வாக மட்டத்திலான அதிகாரிகளுக்கு வழங்கிய பின்னர் அமைச்சர்களுக்கு வரியற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவது சிறந்ததாக இருக்கும் என பல்வேறு தரப்பினரும் அரசாங்கத்திடம் யோசனைகளை பரிந்துரைத்துள்ளனர்.

இதேவேளை, அரசாங்க உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை ஒத்த ஒரு வாகன அனுமதிப்பத்திரத்தையாவது தமக்கு வழங்குமாறு அமைச்சர்கள் சிலர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதன்படி, அரசாங்கத்தின் நிர்வாக மட்டத்திலான அதிகாரி ஒருவருக்கு வழங்கப்படும் வரியற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரமொன்றின் பெறுமதி சுமார் 25 இலட்சமாகும்.

வாகன இறக்குமதியை தடை செய்ததையடுத்து, அரசாங்கத்தின் அநேக நிர்வாக மட்ட அதிகாரிகளுக்கு குறித்த வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரத்தை அருகில் வைத்துப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சுமத்துவதாக செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவர்களுள் வைத்தியர்கள், பொறியிலாளர்கள் உள்ளிட்ட தொழில் வல்லுநர்கள் அதிகளவில் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.


(அ)

# பல்கலை. மானியங்கள் ஆணைக்குழுவை இல்லாது ஒழிப்பதற்கு அரசாங்கம் முயற்சி!

## ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 07

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை இல்லாதொழிக்க அரசாங்கம் முயற்சி செய்துவருவதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலவசக் கல்வி என்பது நாட்டில் உள்ள அனைவரும் அனுபவிக்கும் ஒன்று. தொடர்ந்து 85 வருட காலமாக இந்த உரிமையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. அத்துடன், கஷ்டப் பிரதேசங்களில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு வரும் மாணவர்களின் வாழ்க்கையை வெற்றியடையச் செய்வதற்கு பல்கலைக்கழகத்தில் பெற்ற கல்வி பெரும் உதவியாக அமைந்திருந்தது. இந்த உரிமைக்கு இப்போது சவால் விடுக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையில் கடுமையான மாற்றங்களை மேற்கொள்ளும் முன்மொழிவுகளை அரசாங்கம் முன்வைத்துள்ளது.

இந்த முன்மொழிவுகளின் சாராம்சம் தான் உயர்கல்வித் துறையிலிருந்து அரசு விலகுவதாகும். உயர்கல்விக்கான பொறுப்பை நேரடியாக ஏற்றுக் கொள்ள தற்போதைய அரசாங்கம் தயாராக இல்லை. எனவே இதனால் உள்ளோர் இல்லாதோர் இடைவெளி கணிசமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. இளைஞர்களின் விரக்திப் போக்கு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

அரசாங்கம் கொண்டு வந்துள்ள பிரேரணைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை இல்லாதொழிப்பது குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல முக்கிய செயல்பாடுகளை கொண்டுள்ளது. பல்கலைக்கழக கட்டமைப்பின் கல்வித் தரத்தைப் பாதுகாப்பது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். உயர்கல்விக்கான முன்மொழிவுகளை அரசாங்கம் கொண்டு வந்தாலும், அவை நேர்மையான முன்மொழிவுகள் அல்ல.

அத்துடன், வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கி, அவர்களை நாட்டிற்கு அழைத்து வந்து, இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறச் செய்து, அவர்களுக்கு இலங்கையில் வேலை வாய்ப்பு வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது.

இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர். அவர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த முயற்சியை முறியடிக்க பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும். உயர் கல்வியை இல்லாதொழிக்க இந்த மக்கள் ஆணை இல்லாத அரசாங்கத்திற்கு இடமளிக்கக் கூடாது-என்றார்.

(அ)

# சாதாரண தரப் பரீட்சைக்கு சென்ற மாணவன் பரிதாபமாக உயிரிழப்பு

கொழும்பு, மே. 07

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதச் சென்ற மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பலாங்கொடை - மாரதென்ன பகுதியில் இந்த துயரச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

2023ஆம் கல்வியாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமாகின.

இந்நிலையில், பரீட்சை எழுதச் சென்ற குறித்த மாணவன் அப்பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுவிட்டு திரும்பிய நிலையில் தவறி கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# மஹரகமவில் வடிகானிலிருந்து 180 கடவுச்சீட்டுகள் மீட்கப்பட்டன

மஹரகம, மே 07

மஹரகம பகுதியிலுள்ள வடிகான் ஒன்றில் கடவுச்சீட்டுகள் அடங்கிய பை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

விசாரணையின் போது, அந்த பையில் மஹரகமவிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட 180 வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் குறித்த பையில் இருப்பது தெரியவந்தது.

இதேவேளை, இந்த விவகாரத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் சுமார் 26 கோடி ரூபாயை மோசடி செய்துவிட்டு தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனந்தெரியாத நபர் மாணவிக்கு ஊசி ஏற்றியதாக பரவியது வதந்தியே

## மட்டக்களப்பு பொலிஸார் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 07

**மட்டக்களப்பில் மாணவி ஒருவருக்கு பாடசாலை முன்றலில் வைத்து இனந்தெரியாத நபர் ஒருவர் ஊசி ஏற்றிவிட்டு தப்பிச் சென்றார் என்று சமூகவலைதளங்களில் பரவிய தகவல் வதந்தி என்று மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டார தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் இடம் பெற்றதாக பரவிய இந்த சம்பவம் தொடர்பான உண்மைத் தன்மையை அறியும் நோக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினரை எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபோது வெளியான தகவல்கள் வருமாறு,

குறித்த மாணவி, ஆரம்ப பிரிவில் கல்வி கற்கிறார். அவர், பாடசாலை முடிந்து வீட்டுக்கு சென்று, தனது பெற்றோரிடம் இனந்தெரியாத நபரொருவர் தனக்கு ஊசி ஒன்றை ஏற்றினார் என்று கூறியுள்ளார்.

இது தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தைத் தொடர்பு கொண்ட மாணவியின் தந்தை, பாடசாலையில் தடுப்பூசி ஏதும் ஏற்றப்பட்டதா? என வினவியுள்ளார். அவ்வாறு ஊசி ஏதும் ஏற்றப்படவில்லை என பாடசாலை நிர்வாகத்தினர் பதிலளித்த நிலையில், மாணவி தெரிவித்த விடயங்களை தெரியப்படுத்திய தந்தை, பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ள சி. சி ரீ. வி. கமெரா பதிவுகளையும் பரிசோதித்துள்ளார்.

சந்தேகத்திற்கிடமான எவையும் அதில் பதிவாகாத நிலையில் பெற்றோர் மேலதிக நடவடிக்கைகளுக்காக மாணவியை மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைக்காக சேர்த்தனர்.

தனது மகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டமை தொடர்பில் மாணவி கல்வி பயிலும் தனியார் கல்வி நிலைய ஆசிரியைக்கு மாணவியின் தந்தை தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் தனியார் கல்வி நிலைய ஆசிரியை இந்த சம்பவம் தொடர்பில் குரல் பதிவொன்றை, வட்ஸ் அப் குழுவில் இணைத்து, பெற்றோர்களை எச்சரித்திருந்தார்.

தனியார் கல்வி நிலைய ஆசிரியையின் குரல் பதிவு சமூக வலைத்தளங்களில் பரவியது. இந்த சம்பவம் தொடர்பில் உண்மையை ஆராயாது சில தனிப்பட்ட நபர்கள் பேஸ்புக்கில் பதிவு மற்றும் காணொலிகளை பதிவிட்டனர். இவை சமூகவலைத்தளங்களில் பிரபலமாகின.


மாணவி மருத்துவ பரிசோதனைக்கு சேர்க்கப்பட்ட மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் திருமதி க. கலாரஞ்சினி சம்பவம் தொடர்பில் கருத்துரைக்கையில்,

மருத்துவ பரிசோதனைகளில், மாணவிக்கு ஊசி ஏற்றப்பட்டமை தொடர்பில் தெரியவரவில்லை. மருத்துவமனை தொடர்பில் பரப்பப்படும் தகவல்களும் தவறானவை. மருத்துவ பரிசோதனைகளுக்கு அமைய மாணவி மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் 29ஆவது விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளார். அவர் தொடர்ந்தும் சுகதேகியாகவே உள்ளார். விரைவில், வீடு திரும்புவார் என்றார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரின் கவனத்துக்கும் இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பில் எமது செய்தியாளர்களுக்கு பொலிஸார் கருத்து வெளியிடுகையில்,

இந்தச் சம்பவம் தொடர்பில் பாடசாலை மட்டத்திலும் மருத்துவமனை மட்டத்திலும் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சம்பவம் பொய்யானது - என்றனர். (ஐ)

# செங்கலடியில் விபத்து ஐந்து பேர் படுகாயம்!



கல்முனை, மே 07

பயணிகள் சேவையில் ஈடுபட்ட இ. போ. ச. பேருந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானதில் ஐவர் படுகாங்களுக்கு உள்ளாகினர்.

கல்முனை - பொலநறுவை சேவையில் ஈடுபட்ட பேருந்தே நேற்று பின்னிரவு 1.45 மணியளவில் இடம்பெற்றதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனையில் இருந்து மட்டக்களப்பு ஊடாக மகரகம நோக்கி பயணித்த போது செங்கலடி சிக்னல் சந்தியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதி மின்பிறப்பாக்கியையும் சேதப்படுத்தி கடைத் தொகுதிக்குள் புகுந்தது.

இதில், சாரதி, நடத்துநர் உட்பட ஐவர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முக்கிய கலந்துரையாடல் நிந்தவூரில்



நிந்தவூர், மே 07

முன்னாள் உயர்கல்வி பிரதியமைச்சர் மர்ஹூம் மையோன் முஸ்தபாவின் மகன் றிஸ்லி முஸ்தபா அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் இணைவது சம்பந்தமாக கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட செயல்குழு உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் மாவட்ட செயல்குழு தலைவர் கே.எம்.ஏ.ஜவாத் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நிந்தவூர் ஈ.எப்.சி யில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட றிஸ்லி முஸ்தபா உரையாற்றுகையில்

"எனது தந்தை மரணிப்பதற்கு முன் கூறினார், இலங்கையில் இருக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகளில் றிஷாத் பதியுதீன் ஓர் ஆளுமையுள்ள இளம் தலைவர், அவரது கட்சியில் இணைந்து பயணிப்பது சிறந்தது என்றும் என்னிடம் கூறி இருந்தார்.

இந்தக் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களும், இந்த கட்சியின் கட்டமைப்பும் எனக்கு மிகவும் சிறந்ததாகவும், நம்பிக்கையாகவும் உள்ளது. இந்த கட்சியின் மாவட்ட எழுச்சிக்காக முன்நின்று உழைக்க, மாவட்ட ரீதியாக எமது இளைஞர்கள், ஆதரவாளர்கள் மற்றும் தனது குடும்பத்தினர்களின் முழு வருகையுடனான ஒத்துழைப்புடன், கல்முனை தொகுதியில் பிரமாண்டமான ஒரு இணைவுக்கான நிகழ்வொன்றை நான் நடத்த எண்ணி உள்ளேன் - என்றார்.

இந்த நிகழ்வுக்கு கட்சியின் தேசிய தலைவர் றிஷாத் பதியுதீன் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் வருகையோடு கட்சியில் இணைந்து கொண்டு பயணிக்க அங்கீகாரம் வேண்டியவனாக, அதற்கான நேரத்தையும், காலத்தையும் விரைவில் தலைமையிடம் இருந்து ஒதுக்கி தாருங்கள் என கட்சியின் மாவட்ட செயற்குழுவிடம் றிஸ்லி முஸ்தபா வேண்டிக் கொண்டார்.

இங்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயல் குழு உறுப்பினர்கள் அரசியல் உயர் பீட உறுப்பினர்கள் மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# சவூதி மன்னரின் அனுசரணையில் இலவச கண்புரை சிகிச்சை முகாம்



மட்டக்களப்பு, மே 07

இலவச கண்புரை சத்திர சிகிச்சை முகாம் நேற்று திங்கட்கிழமை காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் நடைபெற்றது.

சவூதி அரேபிய மன்னர் சல்மானின் - நிவாரணம் மற்றும் மனிதாபிமான பணிகளுக்கான மன்னர் மையம் இதற்கான நிதி அனுசரணை வழங்கியது.

"சவூதியின் ஒளி" பார்வைக் குறைபாடு மற்றும் அதற்கான காரணிகளுக்கு எதிராக போராடும் தன்னார்வ நிகழ்ச்சித் திட்டம் என்ற உலகளாவிய திட்டத்தின் கீழ் இலங்கையில் கண்புரை நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் இந்த சந்திர சிகிச்சை நடைபெறுகிறது.

இந்த கண் சத்திர சிகிச்சை முகாம் எதிர்வரும் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. பாகிஸ்தான் நாட்டின் கண் மருத்துவர்கள் சத்திரசிகிச்சையை செய்து வருகின்றனர். (ஐ)

# வங்காள விரிகுடாவில் புதிய தாழமுக்கம்!

மட்டக்களப்பு, மே 07

எதிர்வரும் 15ஆம் 16ஆம் திகதியளவில் வங்காள விரிகுடா கடல் பகுதியில் ஒரு தாழமுக்கம் உருவாகி அது சூறாவளியாக வலுவடையும் சாத்தியம் உள்ளதாக ஓய்வுபெற்ற மூத்த மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி கே.சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்.

சூறாவளி ஒன்று உருவாக வேண்டுமாக இருந்தால், அதற்கு தேவையான வானிலை நிபந்தனைகளில் கடல் வெப்பநிலையும் முக்கியமானதொன்றாகும். கடல் வெப்பநிலையானது 26.5 பாகை செல்சியஸூக்கு அதிகமாக காணப்பட்டால் சூறாவளி /தாழமுக்கம் உருவாவதற்கு சாத்தியம் காணப்படும்.

இதன்படி தற்போது வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தின் கடல் மேல்மட்ட வெப்பநிலையானது 31 பாகை செல்சியஸ் - 32 பாகை செல்சியஸ் அளவில் காணப்படுகின்றது. ஆகவே எதிர்வரும் சில நாட்களில் ஒரு தாழமுக்கம் உருவாகும் சாத்தியம் உள்ளது.

எதிர்வரும் 15ஆம் அல்லது 16ஆம் திகதியளவில் வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தில் ஒரு தாழமுக்கம் உருவாகி, அது 17ஆம், 18ஆம் திகதியளவில் மேலும் தீவிரமடைந்து, 19ஆம் 20ஆம் திகதியளவில் மேலும் அது வலுவடைந்து எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதி அளவில் ஒரிசா கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம் இல்லை

## இஸ்ரேல் பிரதமர் இறுக்கமான முடிவு

ஜெருசலேம், மே 07

**படைகளைத் திரும்பப் பெற்று போரை நிறுத்தினால் ஹமாஸ் படையினர் காஸாவை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவார்கள். அதற்கு நாம் ஒருபோதும் வாய்ப்பு வழங்க முடியாது என்று போர் நிறுத்த கோரிக்கையை நிராகரித்தார் இஸ்ரேல் பிரதமர். நெதன்யாகு.**



காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலை முடிவுக்கு கொண்டு வருவதற்காகவும், தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யவும் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தப்படுகிறது. ஆனால், இந்தப் பேச்சுக்களில் பெரியளவில் முன்னேற்றம் ஏற்படவில்லை. கெய்ரோவில் நடந்த பேச்சுக்களுக்கு இஸ்ரேல் தனது குழுவை அனுப்பவில்லை. இதனால் அடுத்தகட்ட பேச்சுக்கள் இன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ரபாவிலிருந்து ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் நோக்கி ரொக்கெட்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர். கெரெம் ஷாலோம் எல்லையிலுள்ள இஸ்ரேல் வீரர்களைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 11 வீரர்கள் காயமடைந்தனர் என்று இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு ஹமாஸ் அமைப்பு பொறுப்பேற்றது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, காஸா போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான முன்மொழிவுகளை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நிராகரித்தார். இஸ்ரேல் வீரர்கள் வெளியேற வேண்டும். போரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்றும் அவர் கூறினார்.

"படைகளைத் திரும்பப் பெற்று போரை நிறுத்தினால் ஹமாஸ் படையினர் தங்கள் பதுங்கு குழிகளிலிருந்து வெளியேறி, மீண்டும் காஸாவைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, அவர்களின் இராணுவக் கட்டமைப்புக்களை மீண்டும் கட்டியெழுப்புவார்கள். அத்துடன், இஸ்ரேல் மக்களை அச்சுறுத்துவார்கள். இத்தகைய சூழ்நிலையை ஏற்க நாங்கள் தயாராக இல்லை" என்றார் நெதன்யாகு.

ரபா மற்றும் காஸா பகுதிகளில் சக்திவாய்ந்த நடவடிக்கை எடுக்கும் காலம் நெருங்கிவிட்டதாக இஸ்ரேல் இராணுவ அமைச்சர் யோவ் கேலண்ட் எச்சரித்துள்ளார். ஹமாஸ் அமைப்பு போர் நிறுத்த ஒப்பந்தத்தில் தீவிரமாக இல்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (எ)



# அல் - ஜெசீரா நிறுவனத்துக்கு சீல் வைத்தது இஸ்ரேல் அரசு

ஜெருசலேம், மே 07

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்குவதால் அல் - ஜெசீரா செய்தி நிறுவனத்தை மூட இஸ்ரேல் அமைச்சரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து, அல் - ஜெசீரா செய்தி நிறுவனத்துக்கு விரைந்த இஸ்ரேல் அதிகாரிகள் அந்நிறுவனத்தின் அலுவலகத்துக்கு சீல் வைத்தனர்.

இஸ்ரேலில் செயல்பட்டுவரும் அல் - ஜெசீரா செய்தி நிறுவனத்துக்கு அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது. கட்டார் அரசின் நிதி உதவியில் செயல்பட்டுவரும் அல் - ஜெசீரா செய்தி நிறுவனம் உலகின் பல்வேறு நாடுகளில் அலுவலகம் அமைத்து செய்தி ஒளிபரப்பி வருகிறது. இஸ்ரேலிலும் அல் - ஜெசீரா செய்தி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தற்போது அச்செய்தி நிறுவனத்தை மூட இஸ்ரேல் அரசு உத்தரவிட்டுள்ளது. (எ)

# உண்மையைக்கூறிய மருத்துவர் பிரான்ஸுக்குள் நுழையத்தடை

பாரிஸ், மே 07

காஸா படுகொலைகள் குறித்த உண்மைகளை பகிரங்கப்படுத்திய பிரிட்டனை சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணருக்கு பிரான்ஸுக்குள் நுழைவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளது.

லண்டனிலிருந்து பிரான்ஸின் சார்ல்ஸ் டி கோல் விமான நிலையத்துக்குச் சென்ற மருத்துவர் கசான் அபு சிட்டாவிடம் அவர் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்கு ஜேர்மனி தடைவிதித்துள்ளது என பிரான்ஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.



கடந்த ஏப்ரலில் இந்த மருத்துவர் ஜேர்மனிக்குள் நுழைவதற்கு ஜேர்மனியின் அதிகாரிகள் தடை விதித்திருந்த நிலையில் தற்போது அவருக்கு எதிராக ஒரு வருட தடை விதிக்கப்பட்டுள்ளது என பிரான்ஸ் அதிகாரிகள் கூறினர். (எ)

# 16 இந்திய மாலுமிகளையும் விடுதலை செய்தது ஈரான்


டில்லி, மே 07

கப்பல் சிறைபிடிக்கப்பட்டு 20 நாட்களுக்குப் பிறகு 16 இந்திய மாலுமிகள் உட்பட கப்பலிலிருந்த 24 பேரையும் ஈரான் விடுவித்துள்ளது.

சிரியாவிலுள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியது. இதில் ஈரானின் இஸ்லாமிய புரட்சிப் படையைச் சேர்ந்த 3 முக்கிய அதிகாரிகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது.

இதனிடையே, கடந்த மாதம் 13 ஆம் திகதி ஓமான் வளைகுடா அகில் ஹார்முஸ் நீரிணையை ஒட்டிய பகுதியில் இஸ்ரேல் தொடர்புடைய எம். எஸ். சி. ஏரீஸ் என்ற சரக்கு கப்பல் வந்த போது அதை ஈரான் சிறைபிடித்தது குறிப்பிடத்தக்கது. (எ)

# மயக்க மருந்து கொடுத்து பெண் எம். பி. வன்புணர்வு



குயின்ஸ்லாந்து, மே 07

அவுஸ்திரேலியாவில் பெண் பாராளுமன்ற உறுப்பினர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டியிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பெண் பாராளுமன்ற உறுப்பினருக்கு ஏற்படுத்தப்பட்ட இந்தக் கொடூரம் அதிர்ச்சியும், அச்சமும் ஏற்படுத்துகிறது என அந்நாட்டு வீட்டு வசதித்துறை அமைச்சர் மேகன் ஸ்கான்லன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த 37 வயது பிரிட்டானி லாவ்கா, சுகாதாரத் துறை துணை அமைச்சராகப் பதவி வகித்து வருகிறார். இவர் குயின்ஸ்லாந்து பகுதியிலுள்ள எப்பூன் தொகுதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில், இரவில் பொழுதுபோக்க தன்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதியில் வெளியே சென்றபோது, அவரை சிலர் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதன்பின் மயக்க மருந்து கொடுத்து, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி உள்ளனர். இந்த துயரச் செய்தியை இன்ஸ்டாகிராமில் அவர் பகிர்ந்துள்ளார்.

அந்த பதிவில் இந்தச் சம்பவம் யாருக்கு வேண்டுமென்றாலும் நடக்கலாம். எங்களில் பலருக்கு இதுபோன்ற சோகம் நடந்துள்ளது எனத் தெரிவித்துள்ளார். என் உடலில் போதைப் பொருள் கலந்திருந்தது என்பது மருத்துவமனையில் நடந்த பரிசோதனை முடிவில் உறுதியானது. ஆனால், அவற்றை நான் எடுத்துக் கொள்ளவில்லை என தெரிவித்துள்ளார்.

இதனால் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டேன். என்னை தொடர்பு கொண்டு பேசிய பிற பெண்களுக்கும் கூட மயக்க மருந்து செலுத்தப்பட்டு இருக்கலாம் எனத் தெரிகிறது. இது சரியல்ல. நம்முடைய நகரில் மயக்க மருந்து கொடுப்பது அல்லது பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுவது போன்ற ஆபத்து இல்லாமல் நாம் மகிழ்ச்சியாக சமூகம் சார்ந்த செயல்களில் ஈடுபட முடிய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (எ)

# ரபாவின் கிழக்கு பகுதியிலிருந்து மக்களே உடன் வெளியேறுங்கள்!

## இஸ்ரேல் உத்தரவு

ஜெருசலேம், மே 07

ரபாவின் கிழக்குப் பகுதியில் வசிக்கும் மக்களை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

ரபாவில் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தலாம் என இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்த மறுநாள் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

உங்களின் பாதுகாப்புக்காக சோதனைச் சாவடிகளுக்கு அருகிலுள்ள மனிதாபிமான பகுதிக்கு உடனடியாகச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என இஸ்ரேல் இராணுவ [illegible] சாளர் தெரிவித்தார்.

அல்ரபாவின் அல்சவ்கா மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் இராணுவம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மட்டுப்படுத்த அளவிலான நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக இஸ்ரேல் இராணுவத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, ஒக்டோபர் 7 ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெயர்ந்த மில்லியன் கணக்கான மக்கள் எகிப்து எல்லையிலுள்ள ரபாவில் தஞ்சமடைந்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணத்தை 20 வீதத்தால் குறைக்குக!

## துறைசார் மேற்பார்வை குழு பரிந்துரை

கொழும்பு, மே. 07

**மின்சாரக் கட்டணத்தை 20 வீதத்தால் குறைக்கவேண்டும் என பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிப்பது தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு பரிந்துரைத்துள்ளது.**

கடந்த 3 மாதங்களில் மின்சார சபை 8,200 கோடி ரூபா இலாபமீட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், மேலும் 20 வீதத்தினால் மின் கட்டணத்தை குறைக்க வேண்டும் என பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிப்பது தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழு பரிந்துரைத்துள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கும், வரத்தகர்களுக்கும் தாமதமின்றி நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு துறைசார் மேற்பார்வைக் குழு வலியுறுத்தியுள்ளது.

அதன்படி, இலங்கை பொதுப் பயன்பாட்டுகள் ஆணைக்குழுவும் மின்சார சபையும், உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான யோசனையை இலங்கை மின்சார சபை தயாரித்து வருவதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இறுதி யோசனை இந்த வாரம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும், அதன் பின்னர், எதிர்வரும் ஜூன் மாதம் முதல் மின்சாரக் கட்டணத்தில் திருத்த செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

(அ)

# பிள்ளைகளை பணயக்கைதிகளாக பிடித்திருந்த தந்தை ஒருவர் கைது!

கொழும்பு, மே. 07

ஹங்வெல்ல பிரதேசத்தில் தனது இரண்டு பிள்ளைகளை பணயக்கைதிகளாக வைத்திருந்த தந்தையொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹங்வெல்ல - ஜல்தர அரச ஊழியர் வீட்டுத் தொகுதியைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் தனது மனைவியைக் கொல்வதற்காக கைக்குண்டுடன் தனது வீட்டுக்கு வந்துள்ளார்.

எனினும் அந்த நேரத்தில் குறித்த பெண் வீட்டை விட்டு ஓடியதையடுத்து அந்த நபர் தனது இரண்டு பிள்ளைகளையும் வீட்டின் அறையொன்றில் பணயக்கைதிகளாக வைத்திருந்துள்ளார்.

10 வயதுச்சிறுமியும், இரண்டு வயது ஆண் குழந்தையுமே பணயக்கைதிகளாக வைக்கப்பட்டனெ என தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கிடைத்த தகவலுக்கு அமைய, உடனடியாக செயற்பட்ட ஹங்வெல்ல பொலிஸ் அதிகாரிகள் குழுவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவும் சம்பவ இடத்துக்கு சென்று குழந்தைகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

சுமார் ஒரு மணி நேரப் போராட்டத்துக்கு பின்னர் பொலிஸ் அதிரடிப் படையினர் இரண்டு குழந்தைகளையும் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

பின்னர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சந்தேக நபரான குறித்த தந்தையை கைது செய்தனர்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக ஹங்வெல்ல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹங்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை 50 வீதத்தினால் குறையும் அபாயம்!

கொழும்பு, மே. 07

சுற்றுலா விஸாவுக்கு இலங்கை அறவிடப்படும் கட்டணத்தை அதிகரிப்பதன் காரணமாக இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 50 வீதத்தால் குறையும் அபாயம் உள்ளதாக இலங்கை பயண முகவர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தற்போது சுற்றுலா விஸாவுக்கு 100.77 டொலர்களை இலங்கை வசூலிப்பதாகவும், விஸா கட்டணம் 50 டொலர்களாக இருந்த போது வெளிநாட்டவர்கள் அதிகளவில் வந்ததாகவும் அந்த சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேலும் ஒரு நபருக்கு 30 நாள் விஸாவுக்கு அதிகபட்சமாக 50 டொலர்களை அறவிடுமாறு ஏற்கனவே அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இந்த நாட்டில் சுற்றுலாவின் மூலம் வெளிநாட்டு நாணயத்தை ஈட்ட வேண்டுமாயின் அவ்வாறான கட்டணங்கள் இருக்கவேண்டும் எனவும் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

(அ)

# மாணவனையும் மாணவியையும் கொடூரமாகத் தாக்கினார் பிக்கு!

கொழும்பு, மே. 07

மேலதிக வகுப்பு இடம்பெறாமையால் வெலிகம பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றுக்கு சென்ற பாடசாலை மாணவன் மற்றும் மாணவியையும் அந்த விகாரையின் விகாராதிபதி, கொடூரமாக தாக்கியதாக குறித்த மாணவனின் பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன் காரணமாக இந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சையில் அந்த மாணவரால் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய பிக்கு கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவ்வருடம் சாதாரண பரீட்சைக்குத் தோற்றவிருந்த வெலிகம பிரதேசத்தில் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர், கடந்த 25 ஆம் திகதி பரீட்சை அனுமதிச் சீட்டில் கையொப்பமிடவுள்ளதாகக் கூறிவிட்டு வீட்டை விட்டுச் சென்றுள்ளார்.

பின்னர் மேலதிக வகுப்பிலும் பங்கேற்கவுள்ளதாகவும் அந்த மாணவன் கூறிச் சென்றுள்ளான்.

ஆனால் மேலதிக வகுப்பு நடைபெறாததால், தனது தோழியுடன் அப்பகுதியில் உள்ள விகாரைக்குச் சென்றுள்ளார்.

அங்கு குறித்த விகாரையின் விகாராதிபதி மாணவனையும் அவருடன் சென்ற தோழியையும் ஈர்க்குமாற்றினால் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்கப்பட்ட மாணவி கூறும் போது,

"இருவரும் விகாரைக்கு சென்றோம். அப்போது அங்கு வந்த தேரர் ஈர்க்குமாறை எடுத்து நண்பரை தாக்கினார். அவர் ஓடினார், நானும் ஓடினேன். ஏன் தாக்கினீர்கள் என்று கேட்டோம். நாங்கள் தவறாக நடந்து கொள்ளவில்லை, பின்னர் என்னையும் அழைத்து தாக்கினார்-என்றார்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவன் மாத்தறை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்கப்பட்ட மாணவனின் தந்தை கூறுகையில்,

இந்த தாக்குதலால் மகனின் உடலின் உள்பகுதி சேதமடைந்துள்ளது. அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்று வைத்தியர்கள் கூறினர். அறுவைச் சிகிச்சைக்காக தீவிர சிகிச்சை பிரிவில் சேர்த்தனர். மகனுக்கு அடித்ததால் ஏற்பட்ட ரத்தக் காயம் இருப்பதாக மனைவி என்னிடம் கூறினார். இது வீழ்ந்ததால் ஏற்பட்ட காயம் அல்ல தாக்கியதால் ஏற்பட்ட காயம் என மருத்துவர்களும் கூறினர்.

பின்னர், இது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்தேன்.

அதன் பிறகு வெலிகம பொலிஸாருடன் விகாரைக்கு சென்றோம். அங்கு தேரர் இல்லை.

மகனுக்கு இன்னும் சாப்பிடவும் குடிக்கவும் முடியவில்லை. 6ஆம் திகதி பரீட்சை. அதுக்குச் செல்லவும் வழியில்லை. படுத்த படுக்கையா இருக்கிறான். மகன் தோழியுடன் சென்றமை குறித்து எங்களுக்கு அறிவித்திருக்கலாம், அதனை விடுத்து இவ்வாறு கொடூரமாக தாக்குவது முறையல்ல. எனது மகனுக்கு நீதி கிடைக்க வேண்டுமானால் தேரருக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும்"-என்றார்.

(அ)

# தெங்கு செய்கை பாதிப்பு

கொழும்பு, மே. 07

அநுராதபுரம் - பலாகல பகுதியில் ஒரு வகை பூச்சி இனங்களால் தென்னை பயிர்ச்செய்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பூச்சி இனம் மிக வேகமாக பரவி வருவதுடன் தென்னை செய்கையை அது முற்றாக அழித்துவிடும் அபாயம் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் தற்போது குறித்த பூச்சி இனம் வாழை, மா, அன்னாசி, எலுமிச்சை மரங்கள் மற்றும் பூந்தோட்டங்களிலும் பரவி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும் அது தோல்வியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உரிய தீர்வை விவசாய அதிகாரிகள் பெற்றுத்தர வேண்டும் என அந்த பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# மீண்டும் முட்டை இறக்குமதி!

கொழும்பு, மே. 07

நாட்டில் முட்டை விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் மீண்டும் இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மே மாதம் ஆகும்போது முட்டையின் விலை குறைவடைய வேண்டும்.

ஆனால், ஒரு குழுவினர் இருந்துக் கொண்டு இந்தவிடயத்தில் ஏகாதிபத்தியமாக செயல்பட்டு வருகின்றனர்.

அவர்கள் செயற்கையாக முட்டைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, முட்டையின் விலையை தொடர்ச்சியாக உயர்த்தி வருகின்றனர்.

நாம் இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதை நிறுத்தியுள்ளமையால் தான், இவர்கள் இவ்வாறு செயல்படுகின்றனர்.

இந்த நிலையில், மீண்டும் இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்தால், முட்டைகளின் விலையைக் குறைக்க முடியும் என நாம் நம்புகிறோம்.

இதற்கான அனுமதியை விரைவில் நாம் வழங்குவோம். இந்தியாவிலிருந்து மீண்டும் முட்டைகள் இறக்குமதி செய்த பின்னர், குறைந்த விலையில், முட்டைகளை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பாடசாலை மாணவர்களுக்கு முட்டை வழங்கும் செயற்பாட்டுக்காக, எமக்கு தற்போது பெருமளவு முட்டைகள் தேவைப்படுகின்றன.

இதற்காக நாம் விரைவிலேயே இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வோம்-என்றார்.

(அ)

# பலாங்கொடையில் மாரடைப்பினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை உயர்வு!

கொழும்பு, மே. 07

கடந்த மூன்று மாதங்களில் பலாங்கொடை பகுதியில் மாரடைப்பால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

திடீர் மரண பரிசோதனைகளின்போது இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக பலாங்கொடை வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி பத்மேந்திர விஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று மாதங்களில் 30 முதல் 50 வயதுக்கு இடைப்பட்டவர்களிடையே பதிவான 70 வீதமான உயிரிழப்புகளுக்கு மாரடைப்பே காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

விசேடமாக இளம் மற்றும் நடுத்தர வயதுடையோர் மாரடைப்பினால் உயிரிழப்பது அதிகரித்துள்ளதாக பலாங்கொடை வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி பத்மேந்திர விஜயதிலக்க கூறினார்.

இந்நிலையில், 30 வயதுக்கு மேற்பட்ட நபர் ஒருவருக்கு திடீரென வயிறு மற்றும் மார்பு பகுதியில் எரிச்சல், தலைசுற்றல் போன்ற நிலைமைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் உடனடியாக வைத்தியர் ஒருவரை சந்தித்து குருதி மற்றும் ஈ.சி.ஜி. பரிசோதனைகளை முன்னெடுப்பது சிறந்ததெனை அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிங்கப்பூர்...

எதிர்வரும் 27 ஆம் திகதி இலங்கை வரவுள்ளனர்.

சிங்கப்பூர் போன்று மாற வேண்டும் என்று கனவு கண்டால் மாத்திரம் போதாது அதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பணிமனை திறப்பு விழாவிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர்,

பொருளாதாரக் கொள்கைகள் ஆட்சி மாற்றத்துடன் மாற்றமடைவது இலங்கையின் தற்போதைய நிலைக்கு பிரதான காரணமாகும். நாடு என்ற ரீதியில் வங்குரோத்து நிலையடைந்தமைக்கு அரசியல் காரணிகளே பொறுப்புக் கூற வேண்டும் - என்றார். (எ)

### நீர் வழங்கல்...

1998 இல் கட்டுமான முகாமைத்துவத்தில் முதுமாணி பட்டத்தை மொறட்டுவை பல்கலைக்கழகத்திலும் 2008 இல் நீரியல் மற்றும் நீர் வளங்கள் கற்கைகளில் முதுமாணி பட்டத்தை நெதர்லாந்து பல்கலைக்கழகத்திலும் 2018 இல் வணிக நிர்வாகத்தில் முது மாணி பட்டத்தை இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையில் கடந்த 29 ஆண்டுகள் பணியாற்றியுள்ள பாரதிதாசன் யாழ்ப்பாணம் - சங்கு வேலியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### உள்ளூர்...

கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

“இன்டஸ்ட்ரி எக்ஸ்போ 2024” கண்காட்சியில் 25 கைத்தொழில் துறைகளைச் சேர்ந்த 1300இற்கும் அதிகமான நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளன.

கண்காட்சியை முன்னிட்டு ஜூன் 18 ஆம் திகதி காலி முகத்திடலிலிருந்து பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் வரை விசேட வாகனப் பேரணியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், ஜூன் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் “நிலையான தொழில் வளர்ச்சிக்கான பசுமை தொழில் முயற்சி” எனும் தொனிப்பொருளில் முதலாவது சர்வதேச மாநாடு இடம்பெறவுள்ளதோடு, விருது வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது- என்றார். (எ)

### யாழ். போதனா...

எவ்வித உண்மையும் இல்லை. எனவே, மக்கள் இவ்வாறான போலி செய்திகள் தொடர்பில் அச்சமடையத் தேவையில்லை.

நாடளாவிய ரீதியிலுள்ள பெரும்பாலான போதனா மருத்துவமனைகளில் ஆயிரக்கணக்கான சத்திர சிகிச்சைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

உலகில் இலவச சத்திர சிகிச்சைகளை வழங்கும் நாடுகள் பெருமளவில் இல்லை. ஆனால், எமது நாட்டில் சாதாரண காய்ச்சலுக்கான மருந்து உட்பட மூளைச் சத்திர சிகிச்சை வரை இலவச தரமான சுகாதார சேவைகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

கோவிட் காலத்தில் மிகவும் வெற்றிகரமாக தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. உலகில் வளர்ச்சியடைந்த பல நாடுகளைவிட இலங்கை முன்னிலை வகித்தது. அந்த வகையில் இந்தக் கட்டமைப்பை மேலும் மேம்படுத்தி முன்னெடுத்துக் கொண்டு செல்வதற்கு துறைசார்ந்தவர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர் - என்றார். (ஐ - எ)

# மே தினப் பேரணிகள் தொடர்பில் ஆராய்கின்றது புலனாய்வுப் பிரிவு

கொழும்பு, மே. 07

அரசியல் கட்சிகளின் தொழிலாளர் தினத்துக்காக அண்மையில் இடம்பெற்ற மே தினப் பேரணிகளில் கலந்துக் கொண்ட மக்கள் தொடர்பில் அரசாங்கத்தின் புலனாய்வுத் துறையினர் இரகசியமான முறையில் ஆராய்ந்து வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆராய்ச்சியின் நிறைவில் அது தொடர்பில் அரசாங்கத்துக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

மே தினப் பேரணிகளுக்காக வருகைத் தந்திருந்த மக்கள் தொடர்பில் வெளியான புகைப்படங்கள், காணொளிகள் மற்றும் புலனாய்வுப்பிரிவினர் அந்தந்த கூட்டங்கள் இடம்பெறும் இடங்களுக்கு சென்று சேகரித்த ஏனைய தகவல்கள் போன்றவற்றை மையப்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில், இம்முறை மே தினப் பேரணிகளுக்காக அதிகளவிலான மக்கள் தொகை பங்குபற்றியிருந்ததாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

எதிர்வரும் தேர்தல்களை மையப்படுத்தி மே தினப் பேரணிகளுக்காக அதிகளவான மக்களை வரவழைக்க அரசியல் தலைவர்கள் பாரிய முயற்சிகளில் ஈடுபட்டிருந்தமை காணக்கூடியதாக இருந்தது.

இம்முறை மே தினப் பேரணிகளுக்காக சுமார் 200 கோடி ரூபாய் செலவழிந்துள்ள நிலையில் இதில் அதிகளவான தொகை மே தினப் பேரணிகளுக்காக மக்களை வரவழைக்க செலவிடப்பட்டுள்ளது.

இந்தத் தொகை எங்கிருந்து பெறப்பட்டது என்ற கேள்வியை சமூக ஆர்வலர்கள் முன்வைத்து வருகின்றனர்.

மே தினப் பேரணிகளுக்காக இலங்கை போக்குவரத்து சபையின் 565 பேருந்துகளுக்கு கட்டணம் செலுத்தப்பட்டிருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

போக்குவரத்துக்கு மேலதிகமாக வருகைத் தந்தவர்களுக்கான உணவு மற்றும் ஏனைய செலவுகளுக்காக இந்தத் தொகை செலவிடப்பட்டுள்ளது. (அ)

### மின்சார கட்டணம்...

வருகிறது. இறுதி வரைவு அடுத்த வாரம் பொது பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் கையளிக்கப்படும்.

இலங்கை மின்சார சபை முன்மொழிவை சமர்ப்பித்த பின்னர், பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்படும் - என்றார்.

இதேசமயம், மின்சார சபையில் கடந்த மூன்று மாதங்களில் ரூ. 8,200 கோடி இலாபம் ஈட்டியதால் பொருளாதார நெருக்கடியை குறைப்பதற்காக துறைசார் மேற்பார்வை பாராளுமன்ற குழு மின் கட்டணத்தை மேலும் 20 சதவீதம் குறைக்க பரிந்துரைத்துள்ளது.

### வெப்பத்தால்...

அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நிலவும் வெப்ப காலநிலையில் அதிக வியர்வையால் உடலில் நீரின் அளவு குறையும். இதனால் மயக்கம், தலைச் சுற்று ஏற்படும். உடல் வெப்பநிலை 40. 5 சென்றி கிறேற்றுக்கு அதிகமாகவும் 105 பரனைற்றுக்கு அதிகமாகும்போது மூளையின் செயல்பாடு பாதிக்கும்.

மேலும், சிறுநீரகம், ஈரல், இருதயத்தில் பாதிப்பு ஏற்படலாம். இதயத்துடிப்பு வீதத்தில் மாற்றம் ஏற்படலாம். சுவாச செயல்பாட்டில் மாற்றம், இரத்தப் பெருக்கு உள்ளிட்ட குறைபாடுகள் ஏற்படலாம்.

வெப்ப சூழலில் வெளியில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். குளிரான இடங்களில் இருக்க வேண்டும். வெப்ப நிலையை போக்கும் வழிமுறையை செய்ய வேண்டும். தண்ணீர் மற்றும் பழச்சாறுகளை அருந்துவதால் உடல் வெப்ப நிலையைக் குறைக்கலாம்.

முதியவர்கள், பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், குழந்தைகளுக்கு வெப்ப நிலையால் அதிகளவு பாதிப்புகள் ஏற்படும். எனவே, கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் வெயிலில் விளையாடுவதைத் தவிர்க்கவும். நீர் அருந்த வேண்டும். குளிரான நீரில் குளிக்க வேண்டும். வெப்ப நிலை அடுத்த வருடம் குறையப்போவதில்லை. இன்னும் கூடப் போகிறது. அதனால், நாம் மரங்களை நடுகை செய்து காற்றை, சூழலை குளிர்மையாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

குடிக்கக்கூடிய அளவு கூலான தண்ணீர் பாவிப்பதால் பெரிய விளைவுகள் வராது. குடிக்கும் திரவ ஆகாரங்கள் நல்லதா? என பார்க்க வேண்டும். பொலித்தீன் பாவனையைக் குறைக்க வேண்டும். பிளாஸ்ரிக் பாவனையைத் தவிர்க்க வேண்டும். வீட்டுக்கு வீடு மரங்களை நட வேண்டும். வயோதிபர்களுக்கு போதிய திரவ ஆகாரங்கள், பழங்களை கொடுக்க வேண்டும். இருதய வருத்தம் உள்ளோருக்கு வெப்ப அதிகரிப்பு கூடிய தாக்கத்தை ஏற்படுத்தும் என வைத்தியர்கள் அறிவுறுத்தினர். (ஐ)

# வேப்பமர உச்சியில் இருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

கொழும்பு, மே. 07

புத்தளம் ஆண்டிகம பகுதியில் 25 அடி உயரம் கொண்ட வேம்பு மரத்தில் தவறான முடிவெடுத்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆண்டிகம, மயில்லாவெவ பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபருக்கும், மனைவிக்கும் இடையில் கடந்த சில நாட்களாக வாக்கு வாதம் ஏற்பட்டு வந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் நேற்று முன் தினம் மாலை மயில்லாவெவ பகுதியில் உள்ள குளம் ஒன்றிற்கு அருகிலுள்ள 25 அடி உயரம் கொண்ட வேம்பு மரத்தின் மீது ஏறிய நபர், அந்த மரக்கொப்பொன்றில் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, அவ்வழியாக சென்ற நபர் ஒருவர் இதுபற்றி பொலிஸாருக்கும், பொதுமக்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற மஹாகும்புக்கடவல பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அத்துடன், சம்பவ இடத்திற்கு சென்ற புத்தளம் பகுதிக்கு பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிசாம் மரண விசாரணையை நடத்தினார்.

உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது. (அ)

### பயிலுநர்...

அமைச்சின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. 1,942 பேர் பயிலுநர்களாகத் தெரிவாகினர்.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோக பூர்வ இணையத்தளமான www.moha.gov.lk இல் பார்வையிட முடியும் என் பது குறிப்பிடத்தக்கது.

### பிரதிவாதியாக...

இடையிலான கடல் எல்லை நிர்ணயம் தொடர்பான உடன்படிக்கையை ஆராய வேண்டியது அவசியம். இதற்கு வெளிவிவகார அமைச்சின் தலையீடு மிகவும் முக்கியமானது - என்றார்.

அப்போது, மனுதாரர் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் ரவீந்திரன் தாபரே, மனுவில் வெளிவிவகார அமைச்சை எதிர் மனுதாரராக குறிப்பிட அனுமதி கேட்டார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், மனுவில் வெளிவிவகார அமைச்சை எதிர்மனுதாரராக பெயரிட அனுமதித்ததுடன், வழக்கை ஒகஸ்ட் 5ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

வழக்கில், இந்திய மீனவர்கள் வடக்கு கடல்பரப்பில் அத்துமீறி நுழைந்து வளங்களை கொள்ளையடிக்கின்றனர். இதனால், வடக்கிலுள்ள சுமார் 50 ஆயிரம் மீனவர் கள் நேரடியாக பாதிக்கப்படுகின்றனர். இவர்களின் நடவடிக்கையால் நாட்டின் பொருளாதாரம் வருடாந்தம் 4 முதல் 7 பில்லியன் வரை நட்டம் அடைகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

### சோதியாவின்...

நேற்று திங்கட்கிழமை இரவு காலமானார்.

மேஜர் சோதியா தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதல் பெண் தளபதி ஆவார். விடுதலைப் புலிகள் மணலாறு காட்டில் மறைந்துவாழ்ந்த சமயம் 1990ஆம் ஆண்டு வீரமரணமானார். இவரின் நினைவாகவே விடுதலை புலிகள் தனது படையணிகளில் ஒன்றுக்கு சோதியா என்று பெயரிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### செப்ரெம்பர்...

15ஆம் திகதி வரை நாடளாவிய ரீதி யில் 3 ஆயிரத்து 527 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு 4 இலட் சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சார்த்திகள் தோற்று கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ - எ)

### அமைச்சர்...

புதிய வீசா நடைமுறை தொடர்பில் அதிருப்தி தெரிவித்தே அவர் தனது பதவியிலிருந்து விலகியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் வீசா வழங்கும் பொறுப்பை இந்திய நிறுவனமான வி. எவ். எஸ். குளோபல் நிறுவனம் பெற்றுக் கொண்டது. வீசா கட்டணமான 50 டொலரில் 18.5 டொலர் நிறுவனத்துக்கு சென்றடைகிறது என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த நிலையில், இலவச வீசாவை அனுபவிக்கும் 7 நாடுகள் பாதிக்கப்படுகின்றன. மிகவும் கீழ் மட்டத்துக்கு சென்ற சுற்றுலா துறையை மீண்டும் வளர்ச்சியை நோக்கிக் கொண்டு சென்றுள்ள இந்தத் தருணத்தில் வீசா தொடர்பான புதிய நடைமுறை பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று தனது பதவி விலகல் குறித்து ஹரின் பெர்னாண்டோ அமைச்சரவைக்கு சுட்டிக்காட்டினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## வறட்சியான காலநிலையினால் நாடு முழுக்க 4,982 பேர் பாதிப்பு!

கொழும்பு, மே. 07

நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக மூன்று மாவட்டங்களில் 4,982 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி கேகாலை, கிளிநொச்சி மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் 1,542 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் கேகாலை மாவட்டத்தில் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வரகாபொல, ருவன்வெல்ல, யட்டியந்தோட்டை, தெரணியகல, தெஹியோவிட்ட, கலிகமுவ மற்றும் கேகாலை ஆகிய பிரிவுகளில் 646 குடும்பங்களைச் சேர்ந்த 2,702 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பொருளாதார சுதந்திரம் பெண்களுக்கு வேண்டும்

### வடக்கு ஆளுநர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், மே. 07

பெண்களுக்கு பொருளாதார சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்ச்சியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை கூறினார்.

மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனையினால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மற்றும் சவால்கள் என்ற தொனிப்பொருளில் இந்த விழிப்புணர்வு மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் பாவனை ஒரு சவாலான பிரச்னையாக காணப்படுகின்றது. போதைப்பொருள் பாவனையால் பெண்கள் நாளுக்கு நாள் சவால்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்த ஆளுநர், இந் நிலையை மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கூறினார்.

அத்துடன் போதைப்பொருளுக்கு எதிரான பிரசாரத்துக்கு பதிலாக இளைஞர்கள் மாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டு அவர்களின் திறமைக்கு களம் அமைத்துக்கொடுக்கவேண்டும் எனவும் வடக்கு மாகாண விளையாட்டு திணைக்களம் மற்றும் கலாசார திணைக்களம் இணைந்து கிராமிய மட்டத்தில் புதிய செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

மேலும் குடும்பங்களின் பொருளாதாரத்தை அழிக்கும் போதைப்பொருளுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்தார். (அ)

# தமிழகத்தில் விடுதலையான 5 மீனவர்கள் பற்றி அமைச்சர், எம்.பிக்கள் அக்கறை காட்டவில்லை!

### வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் குற்றச்சாட்டு

மன்னார், மே. 07

**இந்திய கடற்பரப்பில் நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்டுள்ள 5 மீனவர்களையும் நாட்டுக்கு அழைத்து வர கடற்றொழில் அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை எவ்வித முனைப்பும் காட்டவில்லை என வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம் குற்றம் சுமத்தியுள்ளார்.**

நேற்று திங்கட்கிழமை காலை மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி தலைமன்னாரில் இருந்து கடற்றொழிலுக்கு சென்ற 05 மீனவர்கள் தமிழக கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுவந்த நிலையில் கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாத நிலையில் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மீன்பிடியில் ஈடுபட்டபோது கடலில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக அவர்களின் படகு அங்கு ஒதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மீனவர்கள் 5 பேரும் கைது செய்யப்பட்ட காலம் முதல் அவர்கள் விடுவிக்கப்பட்ட காலம் வரை சுமார் 6 மாதங்கள் அவர்கள் தொடர்பான எவ்வித நடவடிக்கைகளையும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சர் எவருமே எடுக்கவில்லை.

தமிழக மீனவர் ஒருவர் இலங்கையில் கைது செய்யப்பட்டிருந்தால் அல்லது பாதிக்கப்பட்டிருந்தால் தமிழகத்தில் போராட்டங்கள் இடம்பெறுவதுடன், தமிழக அரசு மற்றும் அங்குள்ள இந்திய துணைத் தூதரகங்கள் முனைப்புடன் செயற்படுகின்றன. ஆனால், எமது மீனவர்களுக்கு இவ்வாறான நிலை ஏற்படுகின்றபோது இங்குள்ள அரசியல் பிரதிநிதிகளால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

இந்த 5 மீனவர்களும் விடுவிக்கப்பட்டு இன்று இந்தியாவில் உள்ள எம்மோர் என அழைக்கப்படும் புத்த கோவில் பகுதியில் இலங்கை துணைத் தூதரகத்தினால் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்களை இலங்கைக்கு அழைத்து வரும் நடவடிக்கைகளை இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. இவர்களில் மூவர் திருமணம் செய்தவர்கள். இருவர் திருமணம் செய்யாதவர்கள். அவர்களின் குடும்பங்கள் இங்கு பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றன.

அவர்களின் குடும்பத்தினரை சந்தித்து அவர்களின் தற்போதைய நிலையை எவரும் கேட்டறிந்ததாக தெரியவில்லை. வட பகுதியில் உள்ள ஒவ்வொரு மீனவரின் நிலையும் இவ்வாறே அமைந்துள்ளது-என்றார். (அ)

## இராணுவத்தினர் விளையாட்டுப் பூங்கா அமைப்பதற்கு கிளிநொச்சியில் எதிர்ப்பு!

கிளிநொச்சி, மே. 07

கிளிநொச்சி டிப்போ சந்தியில் யுத்த நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டு இடத்தில் சட்ட விரோதமாக இராணுவத்தினர் விளையாட்டு பூங்கா ஒன்றை அமைப்பதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஷ் நேரில் சென்று பார்வையிட்டதோடு இவ்விடத்தில் தொடர்ந்து இராணுவத்தினர் ஆதிக்கம் செலுத்துவது தொடர்ந்தால் மக்களே ஒருமித்த அளவிலான போராட்டம் ஒன்றை மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்தார்.

பூநகரி பொன்னாவெளி பகுதியில் வளங்கள் சூறையாடப்படுகின்றன. உருத்திரபுரம் உருத்திரபுரீச்வரர் ஆலயம் ஆக்கிரமிக்க முயற்சிக்கப்படுகிறது.




இவ்வாறான நிலையில் அனுமதியில்லாது இராணுவம் மேற்கொள்ளும் கட்டுமானத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் கரைச்சி பிரதேச சபைக்குச் சென்று அங்கு கரைச்சி பிரதேச செயலாளரிடம் இச்சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார். (அ)

## பாராளுமன்ற அமர்வு இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, மே. 07

பாராளுமன்றம் இன்று முதல் 10ஆம் திகதி வரை கூடவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று முற்பகல் 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளதுடன் பல்வேறு சட்டமூலங்கள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இன்று முற்பகல் 10.30 வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 10.30 முதல் மாலை 5.00 மணி வரை பிரிவிடல் திருத்தச் சட்டமூலம், பராட்டே சட்டத்தை 2024 டிசெம்பர் 15ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கும் திருத்தச் சட்டமூலம், இரண்டாம் மதிப்பீடு என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (அ)

## முதல்முறையாக இலங்கையில் "ஏஐ" செய்தி வாசிப்பாளர்கள்!

### ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முயற்சி!





கொழும்பு, மே. 07

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை (AI) பயன்படுத்தி இரண்டு செய்தி வாசிப்பாளர்களை உருவாக்கி செய்தி வாசிக்கச் செய்துள்ளது.

இது உள்ளூர் ஊடகத்தில் முக்கியமான மைல்கல்லாக அமைந்துள்ளதாக கூறப்படுகிறது.

பிரபல சிங்கள மொழி செய்தி வாசிப்பாளர்களான சமிந்த குணரத்ன மற்றும் நிஷாதி பண்டாரநாயக்க ஆகியோர் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி செய்தி வாசிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இந்த செய்தி வாசிப்பாளர்களின் அறிமுகம் நடந்துள்ளது.

நாட்டில் சிங்கள மொழியில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி செய்தி ஒளிபரப்பப்பட்டது இதுவே முதல் முறையாகும். (அ)

# சம்பள அதிகரிப்பு வழங்க கோரி கிராம அலுவலர்கள் போராட்டம்!

கொழும்பு, மே. 07

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கிராம உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

நாடாளாவிய ரீதியில் கிராம உத்தியோகத்தர்கள் நேற்றும் இன்றும் சுகயீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுப்பதாக அகில இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க அறிவித்துள்ளார்.

பொறுத்தது போதும் எனும் தொனிப்பொருளில் இவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

நாடாளாவிய ரீதியில் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் சுகயீன விடுமுறைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக அகில இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

தங்களது கோரிக்கை தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் உரிய கவனம் செலுத்தப்படாவிடின் போராட்டம் தொடரும் எனவும் கிராம உத்தியோகத்தர்கள் அறிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.